இறையன்பு

இறைநெறி நடப்பவர்கள் பல்வேறு எல்லைகளை கடக்க வேண்டியிருக்கிறது. அவற்றையெல்லாம் உரிய இடங்களில் விவரித்து விட்டேன்.

இறைநெறி என்னும் இப்பாதை நீண்டு செல்கிறது. இதன் கடைசி எல்லைதான் இறையன்பு; பக்தர்கள் அடையத் துடிக்கும் கடைசிக் குறிக்கோளும் இதுதான். இந்த எல்லையை ஒருவன் வந்தடைந்து விட்டால் அவன் அடுத்து வேறு எந்த எல்லையையும் தேடியலையவேண்டியதில்லை. இதுவரை அவன் படிப்படியாகக் கடந்து வந்த எல்லைகள் அனைத் திற்கும் சேர்த்து இப்போது அவன் பயனடைவான்.

இந்த இறையன்பிற்கும் பல்வேறு படித்தரங்கள் உள்ளன. இறையன்பு ஒவ்வொரு படியாகக் கடந்து கடைசிப்படியை அடையும்போது அதற்கு 'இறைகாதல்' என்ற பெயர் கிடைக்கிறது. இறையன்பிற்கு முன்னர் பாவ மன்னிப்பு, பொறுமை, துறவறம் முதலிய படித்தரங்கள் இருக்கின்றன. இந்தப் படித்தரத் தொடர், இறையன்போடு முடிவடைகிறது.

அதன் பிறகு இறையன்பு நன்கு வலுவுற்று 'இறை காதல்' என்ற பெயரைப் பெறுகிறது. இந்த இறையன்பு மிகவும் உயர்ந்த இடத்தில் வீற்றிருக்கிறது. ஆனால் சில அறிஞர்கள் இறை யன்பை மறுக்கிறார்கள். ''இறையன்பு என்று ஓர் உள்ளமை கிடையாது. இறைவனின் சட்டங்களை நல்லமுறையில் பின்பற்றுவதைத்தான் 'இறையன்பு' என்று குறிப்பிடுகிறோம்'' என்று வாதிக்கிறார்கள். இவர்கள் இறையன்பையே மறுத்துவிட்டதால் அதிலிருந்து வெளிப்படும் பலதரப்பட்ட இறை இன்பங்களையும் மறந்தவர்களாகிறார்கள்.

இந்தக் கொள்கை முற்றிலும் தவறானது. அன்பு பலப் பல வகைப்படும். அதில் இறையன்பு என்றும் ஒன்றுண்டு. இது விஷயத்தில் சிலருக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகம் போகப் போகத் தெளிந்துவிடும். இதோ சிக்கலறுத்து உண்மையைத் தெளிவு படுத்துகிறேன்.

முதன் முதலில் திருமறையை எடுத்துக் கொள்வோம். அது இறையன்பு குறித்து எப்படித் தீர்ப்பளிக்கிறது என்று ஆராய்வோம். அது முதல்வனின் நூல். எனவே அதன் கருத்துகளும் முதலிடம்பெறவேண்டியது நியாயம்தானே!

இறைவனையும், திருநபியையும் விரும்புவது-அவர்கள் மீது அன்பு செலுத்துவது கடமை என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் அபிப்பிராய வேற்றுமை கிடையாது. இப்போது நீ கொஞ்சம் சிந்தித்துப்பார். 'இறையன்பு என்று ஓர் உள்ளமை கிடையாது' என்பவர்கள் இதைக் கவனிக்கட்டும். இல்லாத ஒன்றை எப்படிக் கடமையாக்க முடியும்?

இறைவனுக்கு ஒரு மனிதன் முற்றிலும் சரியாக வழிபடுவதற்கு அவன் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் அன்பு தான் - இறையன்புதான் காரணம். ஏனெனில் மனிதன், தான் விரும்பாததை எக்காரணம் கொண்டும் பின்பற்றப் போவ தில்லை. இதிலிருந்து இறையன்பிற்குப் பிறகுதான் இறை

வழிபாடு உருவாகிறது என்று அறிந்து கொள்ளலாம். அப்படியிருக்க "...இறை வழிபாட்டையே இறையன்பு என்று குறிப்பிடுகிறோம்!" என்று சிலர் வாதிப்பது எப்படிப் பொருத்தமாயிருக்கும்? அவர்களின் அறியாமையை என்னென்பது?

ஆக, மனிதன் ஏதோ ஒன்றை விரும்புகிறான்; அதன்மீது அன்பு செலுத்துகிறான். இது முதல் வேலை. அடுத்தபடியாக அவன் தன் விருப்பத்திற்குரிய-அன்பிற்குரிய பொருளை பின்பற்றுகிறான். இது அன்பு மரம் தரும் கனி. எனவே இறைவழிபாடு எனும் கனியை நீ அடைய விரும்பினால் முதலில் இறையன்பை உன் உள்ளத்தில் உண்டாக்கிக் கொள். இறையன்பு இல்லாமல் இறைவழிபாடு உண்டாக முடியாது.

இறையன்பு குறித்து இன்று நீயும் நானும் தர்க்கம் செய்து கொண்டிருக்கிறோம். 'இறையன்பு என்று ஓர் உள்ளமை உண்டா, இல்லையா?'என்று வாதம் புரிகிறோம். ஆனால் திருநபியவர்களோ, அவர்களின் நண்பர்களோ இப்படிச் செய்யவில்லை. இறையன்புக்கென்றே தங்கள் உள்ளத்தில் பெரும் பகுதியை அவர்கள் ஒதுக்கி விட்டிருந்தார்கள். அந்த உத்தமர்களைப் பற்றித்தான் இறைவன் "அவர்கள் இறைவனை விரும்புகிறார்கள்; இறைவன் அவர்களை விரும்புகிறான்" என்று குறிப்பிடுகிறான். "இறை நம்பிக்கை பூண்ட விசுவாசிகள் இறைவன் மீது பேரன்பு கொண்டிருக்கிறார்கள்" என்றும் திருமறை பிறிதோரிடத்தில் கூறுகிறது.

இவை இறையன்பின் உள்ளமைக்குச் சரியான சான்றுகள். இதை நீ கவனி; மறுப்பாளர்களும் கவனிக்கட்டும்!

திருநபியவர்களின் பொன்மொழிகளை எடுத்துப் பார்த்தாலும் அவர்களுக்கு ஆதாரம் கிடைக்கப் போவதில்லை. ஏனெனில் இறையன்பை, மத நம்பிக்கை (ஈமான்)க்குரிய நிபந்தனைகளில் ஒன்றாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் நபியவர்கள். இந்தக் கருத்து எண்ணற்ற இடங்களில் காணப்படுகிறது.

"நபியவர்களே! ஈமான் என்றால் என்ன? என்று ஒருவர் கேட்டார்.

நபியவர்கள் விடையிறுத்தார்கள்: "எல்லாரையும்விட-எல்லாவற்றையும் விட இறைவனையும் அவன் திருத்தூதரையும் நீர் விரும்புவதுதான்!"

"எல்லாவற்றையும் விட ஒரு மனிதனுக்கு இறைவனும் திருநபியவர்களும் அன்பிற்குரியவர்களாக ஆகும் வரை அவன் உண்மையான விசுவாசியாக முடியாது!" என்று அண்ணல் நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

"அண்ணலவர்களே! தங்களை நான் விரும்புகிறேன்" என்றார் ஒருவர். "அப்படியானால் வறுமையைச் சகித்துக் கொண்டு செயலாற்றும்!"-நபியவர்கள் பதிலிறுத்தார்கள். செல்வத்தை ஒதுக்கிவிட்டு வறுமையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களல்லவா அவர்கள்? அவர்களை விரும்புபவர்களும் அப்படித்தான் இருக்கவேண்டும்!

வந்தவர் விடவில்லை. மீண்டும் வினவினார் : "நான் இறைவனையும் விரும்புகிறேன்."

நபியவர்கள் புன்முறுவல் பூத்தார்கள்: "மகிழ்ச்சி! இன்னலில் சோர்ந்து விடாமல் செயல் புரியும்!" என்றார்கள்.

இறைவன் மக்களுக்களித்திருக்கும் அருட்கொடைகள் அனந்தம். அவற்றை யாரும் அனுபவிக்கலாம். இன்பத்தை யாரால்தான் வெறுக்கமுடியும்? ஆனால் இன்னலில்தான் பொறுமையோடிருக்க வேண்டும். இறையன்பு பூண்டவன் இறைவனால் அளிக்கப்படும் இன்னல்களை மனப்பூர்வமாக வரவேற்றுப் பொறுமையோடு செயலாற்ற வேண்டும். இதைத்தான் நபியவர்கள் குறிப்பிடுகிறார்கள்: "உமர்! அவரைப் பாரும்! அவரின் உள்ளத்தை இறைவன் ஒளிமயமாக்கி விட்டான். அவரை அவரின் பெற்றோருக்கு மத்தியில் நான் பார்த்திருக்கிறேன். உயர்ந்த உணவையும்மேலான குடிவகைகளையும் அவருக்களித்து அவர்கள் காப்பாற்றினார்கள்.

ஆனால் இப்போது அவருடைய நிலைமையைப் பாரும். எப்படி உருக்குலைந்து போய்விட்டார்! அவர் உள்ளத்தில் நிரந்தரமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும் இறையன்புதான் அவரை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இதை அவர் மனப்பூர்வமாக வரவேற்கிறார்!''

உமர் (ரலி) அவர்கள் மௌனியானார்கள்.

''மக்களே! இறைவனை நம்புங்கள்.'' பிறிதோரிடத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: ''உங்களுக்கு இறைவன் காலையுணவை அளிக்கும் போதெல்லாம் அவனை விரும்புங்கள். இறைவன் என்னை விரும்புவதால் என்னை நீங்களும் விரும்புங்கள்''.

நபி இப்ராஹீம் (அலை)அவர்களைப் பற்றிய விருவிருப்பான சம்பவம்ஒன்று மிகப் பிரபலமாகக் குறிப்பிடப்படுகிறது.

அவர்களின் மரணம் நெருங்கிவிட்டது. ஆத்மாவைக் கைப்பற்றுவதற்கென்று நியமிக்கப்பட்ட வானவர் இஸ்ராயீல் அருகில் வந்தார். இப்ராஹீம் நபியவர்கள் எதிர்த்துப் பேசினார்கள்: ''இஸ்ராயீல்! இது நியாயமா? நீரே பாரும். நான் இறைவனின் நண்பன். இது உமக்கும் தெரியும். ஒரு நண்பன் தன் நண்பனை மரணிக்கச் செய்யலாமா?...''

மறுவினாடியே இறைவன் அறிக்கை விடுத்தான்: ''ஒரு நண்பன் தன் நண்பனை நேரில் பார்க்க விரும்பமாட்டானா? எனக்கும் உமக்குமிடையில் நிற்பது மரணம். அதைக் கடந்தால்தானே உமக்கு என் தரிசனம் கிடைக்கும்!''

இப்ராஹீம் நபியவர்கள் வாய்மூடினார்கள்.பின்னர் இறையடி சேர்ந்தார்கள்.

இவற்றின் கருத்துகளைச் சிந்தித்துப் பார். இது எல்லோருக்கும் ஏற்பட்டுவிடாது. இறைவனை விரும்பி அவனுக்கு வழிபடுவர்கள் மட்டுமே இந்த இன்பத்தை அடைவார்கள்.

திருநபி (ஸல்) பின்வருமாறு பிரார்த்திப்பதுண்டு: ''இறைவனே! உன் அன்பை என் உள்ளத்தில் உண்டாக்கு

வாயாக! உன்னை விரும்புபவர்களின் அன்பையும் உன் விருப்பத்தைத் தருபவற்றின் விருப்பத்தையும் எனக்குத் தந்தருள்வாயாக! குளிர்ந்த நீரை விட உன் அன்பை எனக்கு அதிக விருப்பமாக்கி வைப்பாயாக!''

(அரேபியா உஷ்ணப் பிரதேசம். அங்கு நீர் கிடைப்பது பொதுவாகக் கஷ்டம். குளிர்ந்த நீர் கிடைப்பது அதைவிட கஷ்டம். எனவே குளிர்ந்த நீர் அரேபியாவைப் பொறுத்தவரை அரிதான ஒரு பொருளாகும். அதை அரேபியர்கள் அனைவரும் விரும்பினார்கள். நபியவர்களும் விரும்பினார்கள். அந்த விருப்பத்தைவிட அதிகமானஅளவில் இறையன்பை-இறை விருப்பத்தைத் தமக்கு அருளுமாறு அண்ணலவர்கள் பிரார்த்திக்கிறார்கள்).

''ஒருவன் இறைவனை அறிந்தால் அவன் இறையன்பு பூண்டுவிடுவான். உலகை ஒரு மனிதன் அறிந்தால் அதை வெறுக்க ஆரம்பித்துவிடுவான்.''

நபி ஈஸா(அலை)அவர்கள் ஒரு சமயம் சிலரைக் கண்டார்கள்: வாடிவதங்கிய அவர்களின் வதனங்கள் நபியவர்களை இரக்கம் கொள்ளச் செய்தன, ''நீங்கள் ஏன் இப்படி இருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

பதில்வந்தது! ''நரக நெருப்புக்கு நாங்கள் அஞ்சுகிறோம்!''

''அப்படியா! இறைவன் உங்களைக் காப்பாற்றுவானாக!''

ஈஸா நபியவர்கள் நடந்தார்கள். இன்னும் சிலர் எதிர்ப்பட்டனர். இவர்கள் முந்தியவர்களைவிட மோசமான நிலையில் இருந்தனர். உடல்கள் இளைத்துப் போயிருந்தன. வதனங்கள் வெளுத்துக் கிடந்தன.

''ஏன்? உங்களுக்கு நேர்ந்தது என்ன? நீங்கள் ஏன் இப்படி உருக்குலைந்து போயிருக்கிறீர்கள்?'' என்று நபியவர்கள் வினவினார்கள்.

''நாங்கள் நரக நெருப்புக்கு அஞ்சவில்லை! ஆனால் சுவன இன்பத்திற்காக நாங்கள் செயல்புரிகிறோம். சுவனத்தை அடையவேண்டுமென்ற ஆவல் எங்களை நாளுக்கு நாள் உருக்குலையச் செய்து வருகிறது.''

நபியவர்கள் ஆறுதல் கூறினார்கள்: ''வருந்தாதீர்கள்! இறைவன் உங்கள் எண்ணத்தை நிறைவேற்றித்தரும் ஆற்றல் உள்ளவன். அவன் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவான்.''

இப்படிக் கூறிவிட்டு அவர்கள் மீண்டும் நடக்க ஆரம்பித்தார்கள். பிறிதொரு வகுப்பினர் எதிர்ப்பட்டனர். இவர்கள் நடைப்பிணம் போன்று காட்சியளித்தனர் முந்திய இரு பிரிவினரையும்விட இவர்கள் பயங்கரமாக நலிவுற்றிருந்தனர்.

''உங்கள் நிலைமை என்ன? உங்களின் உள்ளத்தை வருத்தும் கவலை என்ன?''

''நாங்கள் நரகத்திற்கு அஞ்சவுமில்லை! சுவனத்தை ஆசிக்கவுமில்லை. இறைவனின் தீர்ப்புப்படி எது கிடைத்தாலும் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இறையன்பு எங்கள் உள்ளத்தில் ஆட்சி செலுத்துகிறது. அது எங்களின் உடலில் ஒவ்வோர் அங்கத்தையும் தன் விருப்பப்படி இயக்குகிறது. அந்த இறையன்புதான் இப்படியெல்லாம் எங்களை மாற்றியமைத்து விட்டது'' என்றார்கள்.

நபி ஈஸா (அலை) அவர்கள் மகிழ்ந்தார்கள்; புன்முறுவல் பூத்தார்கள்; ''நீங்கள் தாம் இறையண்மையைப் பெற்றவர்கள்; நீங்கள் தாம் இறையண்மையைப் பெற்றவர்கள்! நீங்கள் தாம் இறையண்மையைப் பெற்றவர்கள்!''

அப்துல் அஹத் என்ற பெரியார் தம் நண்பர் ஒருவரைக் கண்டார். அவர் பனிப்பாறையின் மீது நின்று கொண்டிருந்தார்.

''இது என்ன? ஏன் இங்கு நிற்கிறீர்? இது பணிப்பாறையாயிற்றே! குளிர் உம்மைப் பாதிக்கவில்லையா?'' என்று வியப்போடு கேட்டார் அப்துல் அஹத்.

அந்த நண்பர் உடனே விடையிறுத்தார்: ''இருக்கலாம், பனிப்பாறை பொல்லாததுதான். ஆனால் என் உள்ளத்தில் இறையன்பு கொதித்துக் கொண்டிருக்கிறதே. அந்த நெருப்புக்கு முன்னால் இந்தச் சாதாரணக் குளிர் என்னை என்ன செய்யமுடியும்?''

இவை யாவும் சிறந்த சான்றுகள். சிந்திப்போருக்குச் சரியான கருத்துகள். இவற்றை ஆராய்ந்தால் எத்தனையோ உண்மைகளை அறிய முடியும். இறையன்பு பூண்டவர்கள் யார்? நம்மைப் போன்ற-உன்னைப் போன்ற மனிதர்கள்தான். அவர்கள் எத்தனை காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள்! அவர்கள் சாதித்தவற்றில் நூற்றில் ஒரு பாகத்தைக் கூட நம்மால் சாதிக்க முடியவில்லையே! இறையன்பு அவர்களுக்கு அதிசயமான பல ஆற்றல்களை அளித்தது. அந்த ஆற்றல்களையெல்லாம் இன்றும் நாம் வரலாற்று நூல்களின் வாயிலாக அறிகிறோம். சிந்தித்துப்பார், தர்க்கம் செய்பவர்களில் அநேகர் அறியாமைப் பிணியால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். இவை போன்று இன்னும் எத்தனையோ சான்றுகள் காட்ட முடியும். ஆனால் அவற்றையெல்லாம் விவரிக்க ஆரம்பித்தால் இச் சிறிய நூல் இடம் தராது.

இறையன்பைப் பற்றித் திருமறையின் கருத்தை நீ ஓரளவு உணர்ந்து கொண்டுவிட்டாய். இது உனக்குப் போதும். இப்போது இறையன்பின் அந்தரங்கம் என்ன என்று ஆராய்வோம். 'அன்பு' என்று நாம் எதைக் குறிப்பிடுகிறோம். இறையன்பு என்றால் அர்த்தமென்ன? அது எப்படி,எங்கிருந்து உதயமாகிறது? அதை உண்டாக்கிக்கொள்ளும் வழி வகை என்ன? என்பன போன்றவற்றை இப்போது நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம்.

✪ ✪ ✪

2. அன்பு என்றால் என்ன?

இறையன்பைப் பற்றி அறிய இப்போது நாம் தயாராகயிருக்கிறோம். அதற்கு முன்னர் நாம் அறியவேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. முதலில் நாம் அன்பைப் பற்றியும் அது ஏற்படும் வழிகளைப் பற்றியும் அதற்குரிய காரணங் களைப் பற்றியும் அறியவேண்டும். அதன் பிறகு தான் நம்மால் இறையன்பை நன்கு உணர்ந்து கொள்ளமுடியும். அன்பு என்பது உணர்ச்சியைப் பின்பற்றித்தான் உண்டாகிறது. மரம்,செடி போன்ற உணர்ச்சியற்றவற்றுக்கு அன்பு என்ற வார்த்தை பொருந்தாது.அவை எதையும் யாரையும் விரும்பு வதில்லை. தம்பாட்டிற்கு அவை இருக்கின்றன. மனிதனும் இந்த நியதிக்குக் கட்டுப்பட்டவன் தான். தான் அறிந்திராத எதையும், எவறையும் அவன் விரும்புவதில்லை. அவன் ஏதேனுமொன்றை விரும்புகிறான் என்றால் அதைப் பற்றி அவன் ஓரளவேனும் அறிந்திருக்கிறான் என்றுதான் பொருள். பணத்தைப்பற்றி என்ன எண்ணுகிறாய்? அதன் உபயோ கத்தை அறியாதவன் அதை ஏன் விரும்பப் போகிறான்?

இதிலிருந்து அன்பு என்பது அறிவையும் உணர்ச்சியையும் பின்பற்றித்தான் உருவாகிறது என்று தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு ஒரு பொருள் குறித்து ஒரு மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் அறிவை, அதனால்ஏற்படும் விளைவை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. சில பொருள்களைப் பற்றி நாம் அறியும் போது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது: ஆனந்தம் உண்டாகிறது. இதுதான் அன்பு. இவை அன்பிற்குரியவை.

2.வேறு சிலவற்றைப் பற்றி அறியும்போது உள்ளம் வருந்துகிறது; நாம் சங்கடமடைகிறோம். இது வெறுப்பு. இவை வெறுப்பிற்குரியவை.

3. வேறு சிலவற்றைப் பற்றி அறியும்போது நமக்கு எத்தகைய உணர்ச்சியும் ஏற்படுவதில்லை. இது மேற் குறிப்பிட்ட இரு நிலைமைகளுக்கும் நடுவே அமைந்திருக் கிறது. இது அன்புமல்ல, வெறுப்புமல்ல. இவை அன்பிற் குரியவையுமல்ல, வெறுப்பிற்குரியவையுமல்ல.

இதிலிருந்து நீ என்ன அறிகிறாய்? அன்பு என்பது, உள்ளம் ஓரளவேனும் இன்பத்தைக் காணும்போது உண்டாகிறது. இந்த அன்பு வலுவடைந்தால் 'மோகம்' என்றும் 'காதல்' என்றும் கூறலாம்.

வெறுப்பு என்பது உள்ளம் ஓரளவேனும் இன்னலைக் காணும்போது உண்டாகிறது. இந்த வெறுப்பு முற்றிப் போகும்போது 'கொடிய விரோதம்' உண்டாகிறது.

இதுதான் அன்பின் அந்தரங்கம்; கவனித்துக் கொள்.

அன்பு, அறிவால் உண்டாகிறது. அறிவு, ஐம்புலன்களால் உண்டாகிறது. ஒவ்வொரு புலனும் ஒவ்வொரு வகையான இன்பத்தைக் காண்கிறது. கண்கள், பூத்துக் குலுங்கும் செடிகளையும் மனம் கவரும் காட்சிகளையும் கண்டு இன்பமுறுகின்றன. காதுகள், இனிய கீதங்களையும், இன்பச்

செய்திகளையும் கேட்டு ஆனந்தமடைகின்றன. மலர்களையும் உணவின் வாசனையையும் மூக்கு பற்றிக் கொள்கிறது. நாக்கு, அறுசுவை நிறைந்த உணவைச் சுவைத்து மகிழ்கிறது. உடலெங்கும் பரவியிருக்கும் உணர்வு மென்மையின்பால் பாய்கிறது; அதை அனுபவித்து ஆனந்தமடைகிறது.

இவை ஒவ்வொன்றிலும் சம்பந்தப்பட்ட புலனுக்கு இன்பமுண்டு. இவை தங்கள் அறிவை-உணர்வை மேலிடத்திற்கு அனுப்புகின்றன. உள்ளம்தான் இவற்றிற்கு மேலிடம். உள்ளம்தான் புலன்களின் உதவியால் எல்லா இன்பங்களையும் அனுபவிக்கிறது. புலன்களால் ஏற்படும் இந்த அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் இன்பமூட்டுகிறது. எனவே மனிதன் இவை ஒவ்வொன்றின் மீதும் அன்பு செலுத்துகிறான்; அவன் உள்ளம் அவற்றின் பக்கம் சாய்கிறது.

''உலகில் மூன்று பொருள்களை நான் விரும்புகிறேன்; வாசனைப் பொருள், பெண்கள், வணக்கத்தில் உண்டாகும் பேரின்பம்!'' என்று அண்ணலவர்கள் கூறியிருப்பது இந்த வகையைச் சேர்ந்ததுதான். வாசனைப் பொருளைத் தம் விருப்பத்திற்குரியதாக நபியவர்கள் ஆக்கிக் கொண்டார்கள். இதற்கு அடிப்படை முகர்தல். வாசனையைக் கண்ணாலோ காதாலோ அறிய முடியாது. முகர்தலால் மட்டுமே அதை அறிய முடியும். அடுத்த இடம் பெண்களுக்கு. இதற்கு அடிப்படை பார்வை: உடலெங்கும் பரவியிருக்கும் உணர்வு பெண்களை முகர்வதாலோ சுவைப்பதாலோ அறிவது கிடையாது. அடுத்தபடியாக இறைவணக்கம் அன்பிற்குரியதாகிறது. இதிலுள்ள பேரின்பத்தைப் புலன்கள் உணர்வதில்லை. அந்த ஆற்றல் அவற்றிற்குக் கிடையாது. ஆறாம் புலன் எனப்படும் உள்ளம்தான் அதில் இன்பம் காணும். இதை நேரிய உள்ளம் கொண்டவர்களே உணர்வார்கள்.

புலன்களால் ஏற்படும் இன்பமும் உள்ளத்தால் ஏற்படும் இன்பமும் அன்பை ஈர்த்து வருகின்றன என்பதை உணர்ந்து

கொண்டு விட்டாய். புலன்களின் இன்பத்தைப் பற்றியும், அதனால் ஏற்படும் அன்பைப் பற்றியும் நான் அதிகமாக விவரிக்கத் தேவையில்லை. அதை நீயே அறிந்து கொள்ளலாம். புலன்களால் எத்தனையோ இன்பங்கள் ஏற்படுகின்றன. எனினும் அவற்றினால் ஏற்படும் இன்பங்கள் அவ்வளவு உயர்ந்தவையல்ல: அவை உன்னிடம் மட்டுமல்ல, மிருகங்களிடமும் உள்ளன. அவை தங்கள் கண்களையும் காதுகளையும் பயன்படுத்தி இன்பம் காண்கின்றன; இன்பம் தருபவற்றை விரும்பிப் பாய்கின்றன. புலனறிவால் ஏற்படும் இன்பத்தை தவிர ஒரு மனிதனுக்கு வேறுவிருப்புவெறுப்பு இல்லையாயின் அவனை பாக்கியமற்றவன் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில் வல்ல நாயனைப் புலன்களால் அறியமுடியாது. கற்பனையால் அவனை உருவகப்படுத்திக் காட்ட முடியாது. கற்பனைக்கும் மனோ ஓட்டத்திற்கும் அவன் அப்பாற்பட்டவன்.

இந்த நிலையை நீ அடைந்து விட்டால் உனக்கும் மிருகத்துக்குமிடையில் அதிக வித்தியாசம் காணமுடியாது. மனிதனுக்கும் மிருகத்துக்குமிடையில் நின்று மனிதனை உயர்த்தியும் மிருகத்தைத் தாழ்த்தியும் மதிப்பிடும் அந்தப் பொருள் என்ன? அவ்விரு இனங்களையும் பிரித்துக் காட்டும் ஆற்றல்தான் என்ன? அதுதான் ஆறாம் புலன்! நீ வேண்டுமானால் 'பகுத்தறிவு' என்றோ, 'உள்ளொளி' என்றோ, 'உள்ளம்' என்றோ அதற்குப் பெயரிட்டுக் கொள்.

உள்ளத்தில் உண்டாகும் அறிவு வலுவானது. உள்ளத்தின் பார்வை-அகப் பார்வை. புறப் பார்வையைவிட உறுதியானது. புறக்கண்களுக்குப் புலப்படாத அநேக விஷயங்கள் அகக் கண்களுக்கு புலப்பட்டுவிடும். கண்களால் ஏற்படும் அறிவை விட உள்ளத்தால் ஏற்படும் அறிவு மிகவும் தெளிவானது. ஒரு பொருளைப் பற்றி உள்ளத்தால் அறிந்து கொள்வது அதே

பொருளைக் கண்களால் பார்த்தறிவதைவிட பயன் மிக்கதாகும். எனவே, உள்ளத்தில் ஏற்படக்கூடிய இறைவன் பற்றிய தெய்வீக கருத்துகள் புலன்களால் ஏற்படும் எந்த அறிவையும்விட அதிகமான இன்பத்தைத் தரவல்லவை. இத்தகைய தெய்வீக ஞானத்தைக் கண்களால் காண முடியாது; காதுகளால் கேட்க முடியாது. இதுபோன்ற இன்பங்கள் ஒரு மனிதனின் உள்ளத்தில் இடம் பெறும்போது தாமாகவே இறையன்பு உருவாகி விடுகிறது. 'இன்பத்தின் பக்கம் உள்ளம் திரும்புவதுதான் அன்பு' என்று முன்னர் நான் குறிப்பிட்டதை நீ மறந்திருக்கமாட்டாய் என்று எண்ணுகிறேன்.

மனிதன் தன்னைத் தானே விரும்பிக் கொள்ளும் சுபாவமுள்ளவன். தன்னை வெறுத்துக் கொண்டவர் எவருமிலர். தன்னை விரும்புவதோடு தன் நன்மைக்காகப் பிறரையும் விரும்புகிறான். இப்படி அவன் அந்நியனை விரும்புவது தன்னுடைய சுயநலத்திற்கே. சுயநலமின்றி ஒரு மனிதன் மற்றொரு மனிதனை விரும்ப முடியுமா? அவன்மீது அன்பு செலுத்த முடியுமா?

முடியாது; கண்டிப்பாய் முடியாது! ஒரு சிறிதும் சுய நலமின்றி ஒரு மனிதன் மற்றொரு மனிதனை விரும்ப முடியாது. விருப்பம் ஏற்படுவதற்குக் காரணம் இன்பம். இந்த இன்பம் ஒரு சிறிதேனும் நன்மை ஏற்பட்டால்தான் உண்டாக முடியும் என்று பலவீனப்பட்ட அறிவுடையவர்கள் கூறுகிறார்கள்.

நான் கூறுகிறேன்: இது தவறு! ஒரு மனிதன் எத்தகைய நன்மையையும் எதிர்பார்க்காமல் மற்றவன்மீது அன்பு செலுத்துவது சாத்தியமே! இதை விரிவாக ஆராய்வோம்.

மேலே குறிப்பிட்ட விருப்பங்கள் இரண்டு வகை: 1. ஒரே மனிதனுக்குத் தன் மீது ஏற்படும் விருப்பம். 2. ஒரு மனிதனுக்கு மற்றவன் மீது ஏற்படும் விருப்பம்.

இவ்விரண்டையும் முறையே ஆராய்வோம்.

மனிதன் தன்னை விரும்புகிறான். இதற்கு ஆதாரம் வேண்டியதில்லை. நீயும் நானும் இதற்குச் சரியான உதாரணங்கள்.

அவன் தன் உயிரையும் உடலையும் விரும்புகிறான். உயிருக்கோ உடலுக்கோ எத்தகைய தீங்கு விளைவதையும் அவன் விரும்பவில்லை. அவன் நிரந்தரமாக உயிர் வாழ்வதை அவன் உள்ளம் விரும்புகிறது. மரணம் சம்பவிப்பதை வெறுக்கிறது. ஒரு மனிதனுக்குத் தன் உயிரைவிட உயர்ந்தது ஒன்றுமில்லை. இதே போன்று மரணத்தைவிடப் பயங்கரமானது ஒன்றும் அவனுக்குக் கிடையாது. எனவே அவன் உயிரை விரும்புகிறான்; மரணத்தை வெறுக்கிறான்.

மனிதன் மரணத்தை வெறுப்பதற்கு இதுதான் காரணம். மரணத்திற்குப் பிறகு ஏற்படப்போகும் தண்டனையோ மரணப் படுக்கையில் நிகழும் பயங்கரத் துன்பமோ மட்டும் இதற்குக் காரணமல்ல. எவ்வித இன்னலுமின்றி, எத்தகைய சிரமமுமின்றி ஒரு கணத்தில் உயிர் பறிக்கப்படுவதாயிருந்தாலும் அவன் மரணத்தை விரும்பத் தயாராகயில்லை.

மனிதனுக்கு வாழ்க்கையில் இன்பம் ஏற்படுவதுபோல் துன்பமும் ஏற்படுகிறது; வியாதிகள் உண்டாகின்றன; இன்னல் பல விளைகின்றன. இதுபோன்ற நேரத்தில் அவன் எதை விரும்புகின்றான்? அவன் வியாதி நீங்கவேண்டும்! அவன் இன்னல் அகல வேண்டும்! இதுதான் அவன் விருப்பம். மரணத்தை ஒருவன் வரவேற்கிறான் என்றால், அவன் தன் வியாதி குறித்துக் கவலைப்படமாட்டான். மரணத்தை வரவேற்கும் சிலர் இப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் தங்கள் ஆரோக்கியம் குறித்து அக்கறை செலுத்தமாட்டார்கள்.

தங்கள் வியாதியைப் பற்றியும் இன்னலைப் பற்றியும் அவர்கள் வருந்தமாட்டார்கள். மரணம் சம்பவித்த பிறகு வியாதியும் இன்னலும் இருக்க முடியாதல்லவா?

உயிர் வாழ வேண்டுமென்று விரும்புவது போன்று சிறப்போடு-பூரணப் பண்போடு வாழவேண்டும் என்று மனிதன் விரும்புகிறான். அற்பனாக, மதிப்பற்றவனாக, நிறைவில்லதவனாக உயிர் வாழ்வதைவிட உயிர் நீத்துவிடுவதே மேலல்லவா? சிறப்போடு-பெருமையோடு பூரணத் தன்மையோடு வாழ விரும்புபவன், கேவல மாக-இகழ்ச்சியோடு வாழ்வதை மரணத்திற்கு ஒப்பாக மதிக்கிறான்! மரணத்தை அவன் வெறுப்பது போல், இழி நிலையையும் மரணத்திற்கு ஒப்பான கீழ்நிலையையும் வெறுக்கிறான்.

இதைப் பற்றியெல்லாம் நீ ஒன்றும் எண்ண வேண்டாம். இது மனித சுபாவம். இப்படித்தான் இறைவன் மனிதனைப் படைத்திருக்கிறான். வாழையடி வாழையாக வந்த பழக்கம் இது.

மனிதன் முதலில் விரும்புவது தன்னுயிர்; அதை இணைந்துள்ள உடல். அடுத்து அங்கங்கள் ஆரோக்கியத் துடனிருப்பதை விரும்புகிறான்; அடுத்தபடியாகப் பொருள் பற்றிய விருப்பம்: பின்னர் மனைவி மக்கள் குறித்து விருப்பம்; பிறகு நண்பர்கள் பற்றிய விருப்பம்....இப்படியே ஒவ் வொன்றாக வளர்கிறது. அங்கங்கள் விரும்பப்படுவது போல அவற்றின் ஆரோக்கியமும் விரும்பப்படுகிறது. ஏனெனில் மனிதன் உயிர்வாழ்வதும் அவன் சிறப்போடு துலங்குவதும் அவனுடைய ஆரோக்கியத்தைப் பொறுத்த விஷயங்கள். அங்கங்களற்றவன், நீங்காத வியாதி கொண்டவன் எப்படி உயர் வாழ்வு வாழ முடியும்?

பொருளை அவன் விரும்புவதற்கும் இதுதான் காரணம். உயிர் வாழ்வதற்கும் அந்த வாழ்வு சிறப்புற்றுத் துலங்கு வதற்கும் பணம் மிகவும் அவசியம். நல்வாழ்வு பெறுவதற்கு அது நல்லதொரு கருவியாகும்.

இதுபோன்று மனிதன் விரும்பும் ஒவ்வொன்றையும் பார்த்துக் கொள்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொன்றையும் மனிதன் விரும்புகிறான். அவற்றின் உருவ அமைப்பிற்காகவோ கவர்ச்சிகாகவோ யாரும் அவற்றை விரும்பவில்லை. அவை மனிதனின் வாழ்க்கைக்குப் பயன்படுகின்றன. அவன் உயிர் வாழ்வதற்கு ஒத்தாசை புரிகின்றன. எனவேதான் எல்லோரும் அவற்றை விரும்புகிறார்கள்.

உன் மைந்தனை நீ விரும்புகிறாய். அதனால் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கிறாய். காரணம் என்ன? உனக்குப் பிறகு உன் பிரதிநிதியொருவன் இவ்வுலகில் உயிர் வாழ வேண்டும் என்று நீ எதிர்பார்க்கிறாய். உன் சந்ததித் தொடர் அறுந்து விடக்கூடாது என்று ஆசைப்படுகிறாய். உன் மைந்தன் உனக்குப் பிறகு உன் இடத்தில் அமர்ந்து உன் பெயரைத் துலங்க வைப்பான்: உன் பிரதிநிதியாகச் செயலாற்றுவான். தான் எப்படியும் உயிர் வாழ வேண்டும் என்ற பேராசையில் 'என் உயிர் போய் விட்டாலும் எனக்குப் பிறகு என் பிரதிநிதியாவது உயிர் வாழவேண்டும்!' என்று ஆவல் கொள்கிறான் மனிதன். ஏனெனில் மைந்தனை ஓரளவு தந்தைக்கு ஒப்பானவன் என்று கூறலாம். மைந்தன் உயிர் வாழ்வதைத் தந்தையின் உயிர்வாழ்வு என்று குறிப்பிடலாம். தந்தை இறந்து விட்டாலும் அவன் பெயர் இறக்க வில்லையல்லவா?

ஆனால் இதிலே ஒரு விசித்திரம். 'உன் உயிர் உன் மைந்தனின் உயிர் ஆகிய இரண்டில் உனக்கு எது வேண்டும்?'

என்று கேட்கப்பட்டால் தன் உயிரைத்தான் தேர்ந்தெடுப்பான். தன் மைந்தனைப் பற்றி அப்போது அவன் கவலைப்பட மாட்டான். மைந்தன் என்னதான் தந்தைக்குப் பிரதிநிதியாக இருந்தாலும் அது தந்தையின் உயிரை விடத் தரத்தில் குறைந்தது தான். தந்தை உயிரோடிருந்தால் எத்தனையோ மைந்தர்கள் உண்டாக வழியுண்டு. சுருங்கக் கூறினால் எந்த மனிதனும் தன் உயிரைவிட மேலானதாக எதையும் கருதமாட்டான் எனலாம். அவன் பெருமையோடு வாழ வேண்டும். இது முதல் எண்ணம், இதற்குப் பிறகுதான் மற்ற எல்லாம்.

இந்தக் காரணத்தினாலேயே அவன் இன பந்துக்களையும் நண்பர்களையும் விரும்புகிறான். அன்பர்களுக்கும் இனபந்து களுக்கும் மத்தியில் பெருமையோடு வாழ்வதை யார் தான் வெறுக்கப் போகிறார்கள்? இன பந்துக்களவற்றவன் அநாதை யைப் போன்றவன். நண்பர்களற்றவன் ஒதுக்கப் பட்டவனைப் போன்றவன். பணபலம் ஒருபுறமிருக்கட்டும்; குடும்பப்பலமும் நண்பர்கள் பலமும் வாழ்க்கைக்கு குறிப்பிட்ட பெருமையை அளிக்கின்றன என்பதை நீ கண் கூடாகக் காணலாம். பொருள், பந்துக்கள், நண்பர்கள் எல்லோரும் ஒரு மனிதனின் வாழ்க்கை யில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துகிறார்கள்.

இவை அனைத்தையும் ஒன்றைக்கூட விடாமல் விரும்பு கிறான். இவற்றின் எதிர்க்கருத்துகளை ஒன்றைக்கூட விடாமல் வெறுக்கிறான்.

அடுத்தபடியாக மனிதனின் அன்பை ஈர்க்கும் ஆற்றல், உதவிக்கு உண்டு. மனிதன் உதவியின் அடிமை. அவன் உள்ளம் தனக்கு உதவியளித்தவனை விரும்புகிறது; அவன் மீது அன்பைச் சொரிகிறது. உதவியாளர்களை விரும்புவதும் விரோதிகளை வெறுப்பதும் மனிதனின் இயல்புகள் என்று நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ''இறைவனே! உன் வழியைப் பின்பற்றி நடக்காத துரோகிகளை எனக்கு

உதவி புரியுமாறு செய்து விடாதே! அவர்களை என் உள்ளம் விரும்ப ஆரம்பித்துவிடும்!'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பதை நினைவு கூர வேண்டும். உதவி புரிந்தவனை வெறுப்பது மனிதப் பண்பல்லவே!

நபியவர்கள் தங்கள் பிரார்த்தனையின் மூலம் புதியதொரு தத்துவத்தை விளக்குகிறார்கள்!

''உதவி செய்தவன் மீது உதவியைப் பெற்றவன் அன்பு செலுத்துவது இயற்கை! இயற்கையை மனிதனால் மாற்றியமைக்க முடியாது. ஒருவன் உதவி புரிந்துவிட்டான் என்றால் அவன் இறைவனின் விரோதியாயிருந்தாலும் சரியே, அவன் மீது அன்பு செலுத்தாமலிருக்க முடியாது. அந்த உதவிக்குரிய அன்பு தானாகவே உருவாகி விடும்.''

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் உறவு முறையில்லாத இருவருக்கிடையில் அன்பு மரம் வளர்வது சாத்தியமாகிறது. உன் வாழ்க்கையிலேயே இது போன்ற நட்புகள் எத்தனையோ ஏற்பட்டிருக்கலாம். உனக்கு உதவி செய்தவர்கள் என்ற காரணத்தினால் எத்தனையோ பேரை இன்றைக்கும் உன் அன்பிற்குரியவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறாய்! இதற்குக் காரணம் உதவி. இவ்வாறு பொதுப்படையாகக் கூறலாம்.

ஆனால் சற்று ஆராய்ந்து பார்த்தால் 'உயிர் வாழ வேண்டும்' என்ற எண்ணமே இதற்கு மூலகாரணம் என்று உணர்ந்து கொள்ளலாம். உதவி செய்தவனை நீ விரும்புவதால் அவனை நேரடியாகப் பயன்படுத்துகிறாய் என்று சொல்லிவிட முடியாது. உன் வாழ்க்கையில் அவன் உதவி ஓரளவு-மிகச் சிறிதளவேனும் வளர்ச்சியூட்டுகிறது. இதை நீ வரவேற்கிறாய். எனவே இதற்குக்காரணகர்த்தாவாகிய உதவியாளனை விரும்புகிறாய். அத்தகைய நிர்ப்பந்த நிலைமை உனக்கு ஏற்படுகிறது. அவனை உன்னால்

வெறுக்கவும் முடியாது; ஏனெனில் உதவியாளன்மீது அன்பு உண்டாவதை யாராலும் தடுக்க முடியாது.

வைத்தியனை நாம் விரும்புகிறோம். அவனை நேரடியாக நாம் பயன்படுத்துவதில்லை. அவன் தரும் மருந்தை விரும்புகிறோம். அதுவுமில்லை. அந்த மருந்தினால் ஏற்படும் ஆரோக்கியத்தையே நாம் விரும்புகிறோம். ஆரோக்கியமின்றி எப்படி உயிர் வாழ முடியும்? அறிஞர்களையும் ஆசிரியர்களையும் நாம் விரும்புகிறோம். ஏனெனில் அவர்களிடம் அறிவுச் செல்வமுண்டு. அறிவை நாம் விரும்புகிறோம். அது வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படுகிறது. எனவே அதற்குப் புகலிடம் போன்றிருக்கும் அறிஞர்களையும் ஆசிரியர்களையும் விரும்ப வேண்டிய நிர்பந்த நிலைமை ஏற்படுகிறது. உணவையும் நீரையும் நாம் விரும்புகிறோம். காரணம் அவை நம் வாழ்க்கைக்கு வழி வகுக்கின்றன. உணவும் நீரும் இல்லாமல் உயிர் வாழமுடியுமா?பணத்தை விரும்புகிறோம், ஏனென்றால் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான உணவு முதலியவற்றைப் பணத்தின் உதவியால் பெற முடியும்!

இவற்றிலிருந்து நீ எதை அறிகிறாய்? வாழ்க்கைக்கு மெருகூட்டும் ஒவ்வொன்றையும் மனிதன் விரும்புகிறான் என்று அறிகிறாயல்லவா? இதுபோன்ற நன்மைகள் ஒருவனிடமிருந்து கிடைக்கும்போது அவன்மீது அன்பு ஏற்படுவது நியாயம்தானே! உதவி அதிகமானால் அன்பும் அதிகமாகும். உதவி குறைந்தால் அன்பும் குறையும், உதவியின் பிரதிபிம்பமல்லவா அன்பு!

அடுத்தபடியாக மனிதன் வேறு சில பொருள்களை விரும்புகிறான். அந்தப் பொருள்களையே விரும்புகிறான்; அவற்றினால் ஏற்படும் இன்பத்தை அல்ல! அந்தப் பொருள்களே, உள்ளமைகளே அவனுக்கு இன்பமளிக்கின்றன. இத்தகைய அன்பை 'உண்மையன்பு' என்று குறிப்பிடலாம்;

இதற்கு உதாரணமாக அழகை, கவர்ச்சியை எடுத்துக் கொள்ளலாம். அழகை-அது எங்கிருந்தாலும் சரி-நாம் ரசிக்கிறோம். அதைப் பார்த்து இன்பமடைகிறோம், இதைத் தவிர அந்த அழகினால் ஏற்படும் விளைவைப் பற்றி நமக்குக் கவலையில்லை. உதவியின் விளைவை நாம் கவனிப்பது போல் இதன் விளைவை நாம் கவனிப்பதில்லை. நமக்கு இன்பமளிப்பது அழகுதான்.

நீ கேட்கலாம்: காமத்தை தணித்துக் கொள்வதற்காகவே மனிதன் அழகை விரும்புகிறான். இருக்கலாம். சில சமயங்களில் அழகு இதுபோன்ற தவறான வழிகளில் பயன்படுத்தப் படுகிறது என்பதை நான் மறுக்கவில்லை. எனினும் அழகுடைய பொருள்கள் அனைத்தையும் காமத்தோடு இணைக்க முடியாது: மலர்களையும் அவற்றின் அழகையும் பார்த்து நாம் இன்பமடைகிறோம். இதில் காமத்திற்கு இடமேது? பச்சைப் பசுமையான புல்தரை - கண்ணாடி போன்று தெளிந்த ஆறு- இவற்றை எல்லாம் நாம் விரும்புகிறோம். இங்கேயெல்லாம் காமத்திற்கு வழியேது?

பசுமையான மரம், செடி, கொடி, ஓடும் தண்ணீர் முதலியவற்றைக் கண்டு நபியவர்கள் ஆனந்தப்பட்டிருக்கிறார்கள்! மலர்களையும் அழகிய உருவங்களையும்-உயிரற்ற உருவங்கள்-பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள். இது மனிதனின் இயல்பு. இவைஉள்ளத்தில் மண்டிக்கிடக்கும் துன்பங்களை எல்லாம் சிறிது நேரத்திற்கு அப்புறப்படுத்தும் ஆற்றலுடையவை. இவற்றின் அழகு நம்மைப் பரவசப்படுத்துகிறது. அந்த அழகிலிருந்து நாம் எதையும் எதிர்பார்க்கவில்லை; காமத்திற்கும் உணர்ச்சிக்கும் இடமில்லை!

இப்போது உனக்கு நம்பிக்கை வந்து விட்டதல்லவா? அழகு அன்பிற்குரியது என்று அறிந்து கொண்டு விட்டாய்! இதை யாரும் மறுக்க முடியாது. மறுபடியும் நினைவு படுத்திக் கொள்.

'அழகு அன்பிற்குரியது!'

திருநபி (ஸல்) அவர்கள், ''இறைவன் அழகன்; அழகை விரும்புகிறான்'' என்று கூறியிருக்கிறார்கள். இறைவன் அழகுடையவன் என்று நிரூபிக்கப்படும்போது 'அவன் அன்பிற்குரியவன்' என்பதில் யாருக்கும் சந்தேகம் ஏற்பட முடியாது. அவனை அறிந்த சிலர் அவன்மீது அவசியம் அன்பைச் சொரிவார்கள். அவன் அந்தச் சிலரின் அன்பிற் குரியவனாக ஆகத்தான் செய்வான்.

✪ ✪ ✪

3. அழகைப் பற்றி...

மனிதர்களில் பலர் புலன்களைக் கட்டிக்கொண்டு மாரடிக்கிறார்கள். அழகைக் கண்ணால்தான் காணமுடியும் என்பது அவர்களின் வாதம். இவர்கள் அழகுக்குக் கொடுக்கும் வியாக்கியானமே விசித்திரமானது. அங்க அமைப்புகள் ஒழுங்காயிருத்தல், மனம் கவர் நிறம், சிவப்பு கலந்த வெண்மை-இவையெல்லாம் அவர்கள் அழகுக்குக் கொடுக்கும் வியாக்கியானங்கள். இவற்றை எல்லாம் கண்ணால்தான் பார்க்க முடியும்! பொதுவாக அழகில்பெரும் பகுதியை மக்கள் கண்களாலேயே ரசிக்கிறார்கள். எனவே, ''அழகை கண்ணால்தான் அறிய முடியும். கண்ணால் பார்த்தறிய முடியாத எந்த அழகும் கிடையாது!'' என்று முடிவு கட்டுகிறார்கள். இதையடுத்து அவர்கள் இறைவனைக் கண்ணால் காணமுடியாது. எனவே அவன் அழகனாக இருக்கவும் முடியாது என்று வாதிடுகிறார்கள்.

இது தவறான வாதம்! அவர்கள் எண்ணுவதுபோல் அழகு கண்ணோடு மட்டும் நின்றுவிடவில்லை. மற்றப் புலன்களும்

அழகை உணர்கின்றன. நீ கொஞ்சம் ஆராய்ந்தால் இதை உணர்ந்து கொள்வாய்!

'அழகிய கடிதம்' என்றும், 'அழகிய குரல்' என்றும், 'அழகிய குதிரை' என்றும் நாம் கூறவில்லையா? இவற்றிற் கிடையில் கண்களுக்கு என்ன சம்பந்தம்? கடிதத்தையும், குரலையும், குதிரையையும் கண்களால் பார்த்து அவற்றின் அழகை நம்மால் உணர்ந்து கொள்ள முடியுமா? கடிதத்தைப் படித்த பிறகு மூளை அதற்கு 'அழகியது' என்ற பட்டத்தை அளிக்கிறது. குரலைக் கேட்ட செவி அதை 'அழகுடையது' என்று கருதுகிறது. ஒவ்வொன்றிலும் அழகு, அகோர என்று இருவகைத் தோற்றங்கள் உள்ளன. கண்களால் பார்த்தறிய முடியாத சில அழகினங்கள் இருப்பதாக இதிலிருந்து அறிகிறோம். அவற்றைப் பற்றி எல்லாம் விரிவாக எழுத முடியாது. எனினும் அவசியமான அளவிற்கு விவரிக்கிறேன்.

ஒவ்வொரு பொருளும் அதற்குரிய பூரணத்துவத்தை அடையும்போது அதற்கு 'அழகுடையது' என்ற பெயர் கிடைக்கிறது. அழகான குதிரை என்றால் பொருள் என்ன? குதிரைக்கு எத்தனை அம்சங்கள் இருக்க வேண்டுமோ அத்தனை அம்சங்களும் அதில் இடம் பெற்றிருக்கின்றன என்றுதான் அர்த்தம். கம்பீரத் தோற்றம், வேகமான ஓட்டம் முதலியவை குதிரையின் சிறப்பம்சங்களில் பட்டவை. ஒரு குதிரையை எந்த அம்சத்தைக் கொண்டு அழகுடையது என்று தீர்மானிக்கிறோமோ, அந்த அம்சத்தைக் கொண்டு ஒரு மனிதனை அழகன் என்று கூறிவிட முடியாது. வேகமாக ஓடுகிறவன் என்ற காரணத்தால் ஒரு மனிதனை அழகன் என்று யாரும் அழைக்க முடியாது. வேகமான ஓட்டம் குதிரைக்குச் சிறப்பம்சமாயிருந்தாலும் மனிதனுக்கு அது சிறப்பைத் தராது; அழகைக் கொடுக்காது. ஒரு புடவைக்கு அழகைத் தேடித் தரும் அம்சம் மனிதனுக்கு அழகை ஈர்த்து வராது. இப்படியே

ஒவ்வொன்றையும் நீ பார்த்துக் கொள். மேலே குறிப்பிட்டவை கண்ணின் பார்வையிலிருந்து அப்பாற்பட்டிருந்தாலும் மற்ற புலன்களில் அவை கட்டுப்பட்டுத்தான் இருக்கின்றன. எனினும் ஐம்புலன்களில் ஒன்றால் அறிய முடியாத எத்தனையோ அழகினங்கள் இருக்கின்றன, அவற்றை அனுபவிக்க ஆறாம்புலன்-உள்ளம்-வேண்டும்.

'அழகிய ஞானம்' என்றும் 'அழகிய வரலாறு' என்றும் நாம் கூறவில்லையா? இந்த அழகை நாம் எப்படி அறிந்து அனுபவிக்கிறோம்? இதைக் கண்ணாலோ காதாலோ வேறு புலன்களாலோ கண்டிப்பாய் அறிய முடியாது. ஆம்! அதை உள்ளத்தால் மட்டுமே அறிய முடியும். அதே உள்ளத்திற்குத் தான் இறைவனின் அழகை-அழகனாகிய இறைவனை அறிந்து அனுபவிக்கும் ஆற்றல் உண்டு.

இறை தூதர்களையும் இறைவனின் அன்பைப் பெற்ற உத்தமர்களையும் நாம் விரும்புகிறோம். ஆனால் அவர்களை நாம் ஒரு தடவை கூடக் கண்ணால் பார்த்ததில்லை. மார்க்க மேதைகளான இமாம் அபூஹனிபா (ரஹ்), இமாம் ஷாபியீ (ரஹ்), இமாம் மாலிக் (ரஹ்) போன்றவர்களை நாம் விரும்புகிறோம். சிலர் தங்கள் தலைவர்களைப் பெரிதும் விரும்புவார்கள். அவர்களுக்கு ஒரு சிறிதும் கண்ணியக் குறைவு ஏற்படாமல் பாதுகாப்பதற்காகத் தங்கள் உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராயிருப்பார்கள். தங்கள் செல்வமனைத்தையும் தங்கள் மார்க்கத்திற்கென்றே செலவு செய்து விடுவார்கள். தங்கள் மார்க்கத்தை இழித்துரைப்பவனை இவர்கள் வெட்டி வீழத்தத் தயங்கமாட்டார்கள். மதத் தலைவர்களுக்காக எத்தனை மானிடனின் உதிரம் இந்த மண்ணகத்தில் உறைந்து போயிருக்கிறது! மதத்திற்காக நடந்த போராட்டம் தான் கொஞ்சமா?

உதாராணமாக இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்களை எடுத்துக் கொள்வோம். அவர்களை அநேகர் விரும்புகிறார்கள். அவர்கள் இமாம் அவர்களைப் பார்த்ததில்லை. ஒரு வேளை இமாமவர்களைஅவர்கள் நேரில் பார்த்திருந்தால் எப்படியோ! எல்லோரும் அழகுடையவர்களாக இருப்பார்கள் என்று எவ்வாறு கூற முடியும்? ஒருக்கால் இமாமவர்கள் குரூபியாயிருக்கலாமல்லவா? குரூபியாக இல்லாவிட்டாலும் பார்ப்பவர்கள் அப்படி எண்ணலாம்.

ஆனால் இமாமவர்களின் வதன அழகிற்காக யாரும் அவர்களை விரும்பவில்லை. அவர்களின் ஆத்மீக அழகைப் பார்த்துத்தான் எல்லோரும் அவர்களைப் பின்பற்றுகிறார்கள். அவர்களின் புற அழகை யாரும் விரும்பவில்லை; வெறுக்கவில்லை. அவர்களின் புற அழகு இப்போது எங்குமில்லை; அது மண்ணோடு மண்ணாகக் கரைந்து மறைந்து விட்டது!

அவர்கள் மார்க்கத்தில் பற்றுள்ள சிறந்த அறிவாளி;இறை நம்பிக்கை கொண்டவர்கள்; இறையன்பு பூண்டவர்கள்; இறை நெறியின் எல்லைகள் அனைத்தையும் கடந்தவர்கள். இந்தப் பண்புகள் யாவும் அழகுடையவை என்பதில் ஐயமென்ன? இந்த அழகைப் பார்த்த மானிடனின் உள்ளம், அந்த அழகுடைய மேதையை விரும்புகிறது. அவர்கள் மீது அன்பைச் சொரிகிறது. இந்த இன்பங்களையெல்லாம் புறக் கண்களால் உணர்ந்தறிய முடியாது.

அபூபக்கர் (ரலி) அவர்களைச் சிலர் விரும்புகிறார்கள். அவர்களின் மதிப்பை எல்லோருடைய மதிப்பையும்விட உயர்த்துகிறார்கள்.

வேறு சிலர் அலீ (ரலி) அவர்களை விரும்புகிறார்கள். மற்றவர்களை மட்டம் தட்டுகிறார்கள். 'அலீயே எல்லாரையும் விடச் சிறந்தவர்!' என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள்.

இந்த விருப்பங்கள் யாவும் புற அழகைப் பொறுத்தவை அல்ல! அந்த மகான்களின் ஆத்மீக அழகை-அக அழகைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். அவர்களின் அறிவு, மார்க்கப்பற்று, இறை நம்பிக்கை, வீரம், தயாளம் முதலிய குணங்கள் தாம் அவர்களுக்கு அழகை அளிக்கின்றன. இந்த அழகுதான் நம்மை அவர்கள் மீது அன்பு கொள்ளச் செய்கிறது.

நாம் அபூபக்கர் (ரலி) அவர்களை விரும்பும்போது அவர்களின் எலும்பையோ, சதையையோ, தோலையோ, உருவ அமைப்பையோ நாம் விரும்பவில்லை என்று உனக்கு தெரியும். ஏனெனில் இவை அனைத்தும் அழியக் கூடியவை. அவற்றிற்கு நிரந்தர அழகைப் பெற்றிருக்கும் பேறு கிடையாது. அவர்களுக்கு 'ஸித்தீக்' என்ற பட்டத்தைக் கொடுத்த அந்த தனிச் சிறப்பம்சம் என்றும் அழியாது. அது புகழுக்குரியது; அன்புக்குரியது. அதை விரும்பும் மக்கள் என்றும் இருந்து கொண்டிருப்பார்கள். ஸித்தீகின் உடல் அழிந்தாலும், ஸித்தீகின் சிறப்பு அழியாது!

இவற்றை எல்லாம் அறிந்து மகிழும் ஆற்றல் உள்ளதிற்கு உண்டு. அது நல்ல வர்ணனைகளைப் பெறும்போது அந்த வர்ணனைகளுக்குரிய மனிதனைத் தேடிப் பாய்கிறது; அவன் மீது அன்பு கொள்கிறது. தீய வர்ணனைகளைப் பெறும்போது அந்த வர்ணனைகளுக்குரிய மனிதனை வெறுக்கிறது! இது உள்ளத்தின் இயல்பு. நபித் தோழர்களை நாம் விரும்புகிறோம். அபூஜஹ்லையும் இப்லீஸையும் வெறுக்கிறோம். இவர்களில் யாரையும் நாம் பார்க்கவில்லை. புலனறிவால் இவர்களில் யாரையும் நாம் விரும்பவுமில்லை வெறுக்கவுமில்லை. ஆறாம் புலனின் காரணமாகவே நாம் விரும்புகிறோம், வெறுக்கிறோம். அதுதான் மனிதத்தன்மையின் அழகையும் அகோரத்தையும் பார்த்தறிகிறது. உள்ளம் ஐம்புலன்களால் அறிய முடியாத வற்றை அறியும் பேராற்றல் பொருந்தியது!

ஒரு குழந்தையின் உள்ளத்தில் ஒரு மனிதன் அன்பைப் புகுத்த விரும்பினால் என்ன செய்ய வேண்டும்? அவர் புரிந்த வீர தீரச் செயல்களையும் அவரிடம் குடி கொண்டிருந்த நற்பண்புகளையும் எடுத்துக் கூறவேண்டும். இதைத் தவிர்த்து வேறு எத்தகைய முயற்சியும் எடுத்துக் கொள்ள வேண்டிய தில்லை, அந்த நற்பண்புகளால் கவரப்பட்ட சிறுவன் தானாகவே அந்த மனிதனை விரும்ப ஆரம்பித்து விடுவான். இதே நிலைமையில்தான் எல்லோரும் இருக்கிறார்கள். இந்த முறை சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பொதுவாக எல்லோருக்குமே உரியதுதான்.

ஹாதிம் தாயைப் பற்றிக் கொடை வள்ளல் என்று கேட்டிருக்கிறோம். காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் குறித்து வீரர் என்று எல்லோரும் கூறுகிறார்கள். எனவே முன்னவரை கொடைக்காகவும் பின்னவரை வீரத்திற்காகவும் நாம் விரும்புகிறோம்; அவர்கள் மீது அன்பு செலுத்துகிறோம். இந்த அன்பு நம்மையறியாமலேயே ஏற்பட்டு விடுகிறது. இந்த அன்பு ஹாதிமை அல்லது காலிதை நேரில் பார்த்ததால் ஏற்பட்டதல்ல என்றுஉனக்குத் தெரியும். அதையே நான் நினைவுறுத்துகிறேன். இந்த அன்பிலிருந்து நாம் எதையும் எதிர்பார்க்கவில்லை. இந்த அன்பில் சுயநலம் சிறிதும் கிடையாது. காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்ட அவர் களிடம் நாம் எதையும் எதிர்பார்க்கவில்லை. அவர்களின் அழகிய தன்மைகள் நம்மை அவர்கள் மீது அன்பு கொள்ளச் செய்கின்றன; அவ்வளவுதான்! 'மனிதனை மனிதன் விரும்புவது சுயநலத்திற்குத்தான்!' என்ற வாதம் இங்கு பொருந்தாது என்பதை நினைவுறுத்த விரும்புகிறேன். எத்தகைய உதவியையும் எவ்வித நன்மையையும் எதிர் பார்க்காமல் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை விரும்ப முடியும் என்பதை இப்போதாகிலும் தெரிந்து கொள்!

இது அகப் பார்வையைப் பற்றிய விஷயம். அகப் பார்வையற்றவர்களும் மனத்தெளிவு குன்றியவர்களும் இதை உணர முடியாது. புறப் பார்வையால் இதை அறிய முடியாது. புறப் பார்வையை விடச் சிலருக்கு அகப் பார்வை வலுவாக இருப்பதுண்டு. இவர்கள் வெளிப் பூச்சில் மயங்கி மனதை இழக்கமாட்டார்கள். அந்தரங்கத்தை ஊன்றிப் பார்ப்பார்கள்.

சுவரின் மீது வரையப்பட்ட சித்திரத்தின் அழகை விரும்புபவனுக்கும் இறை தூதர்களின் ஆத்மீக அழகை விரும்புபவனுக்கும் இடையில் எத்தனை வித்தியாசங்கள்! அவற்றை வரம்பிட்டு விவரிக்க முடியாது; வரையறுத்துக் கூற முடியாது!

இவற்றில் உயர்ந்தது எது? தாழ்ந்தது எது? என்று நான் குறிப்பிடத் தேவையில்லை. உன் தீர்ப்பிற்கே அதை விட்டு விட்டேன். உயர்ந்ததைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதுதானே மனிதத் தன்மை? நீ விரும்பினால் ஆத்மீக அழகிலே இன்பம் காணலாம். இது விஷயத்தில் உனக்குப் பூரண உரிமையுண்டு. இதை நீ விரும்பாவிடில் சுவரின் மீது வரையப்பட்ட உணர்ச்சி யற்ற சித்திரத்தைக் கட்டிக்கொண்டு மாரடி! அதற்கு உனக்கு பூரண உரிமையுண்டு.

✪ ✪ ✪

4. அன்பிற்குரியவன் இறைவன் ஒருவனே!

ஒருவன் இறைவனைத் தவிர்த்து மற்ற பொருள்களை விரும்புகிறான் என்றால் அது அவன் அறியாமையையே காட்டுகிறது. இது என் உறுதி. இறைவனை அறிந்தவன் அவனை விரும்பாமல் இருக்க முடியாது. திரு நபி (ஸல்) அவர்களை விரும்புவதும் புகழுக்குரிய அம்சம்தான்; ஏனெனில் நபியவர்களை விரும்புவதும் அவர்களை அனுப்பிய நாயனை விரும்புவதும் ஒன்றுதான் என்பது என் தீர்மானம். இதேபோன்று இருக்கிறது அறிஞர்களையும் பக்தர்களையும் விரும்புவது. ஏனெனில் இவர்கள் இறைவனையும் நபியவர்களையும் விரும்புகிறார்கள். எனவே இவர் களை நாம் விரும்புவது இறைவனை விரும்புவது போலல்லவா? உன் அன்பனின் நண்பன் உனக்கும் நண்பனல்லவா? சிந்தித்துப் பார்!

அறிஞர்களின் வாழ்க்கையைப் பார்த்தால் நம்மால் எத்தனையோ உண்மைகளை அறிந்து கொள்ள முடியும். அவர்கள் இறைவனைத் தவிர்த்து வேறு யாரையும், எதையும் விரும்பவில்லை. 'இறைவனைத் தவிர்த்து வேறு எந்தப் பொருளும் அன்பிற்குரியதல்ல; விரும்பத் தகுதியுள்ளதல்ல' என்பது அவர்களின் வாதம்.

இதோ விளக்கி எழுதுகிறேன்; அன்பு ஏற்படுவதற்குச் சில காரணங்கள் உள்ளன. அவை அனைத்தும் இறைவனிடம் அடைக்கலப்பட்டிருக்கின்றன. எனவே அவன்மீது அன்பு ஏற்படுவது இயற்கையாகி விட்டது. காரணம் ஏற்பட்ட பிறகு காரியம் ஏற்படாமலிருக்க முடியாதல்லவா?

1. மனிதன் தான் உயிர் வாழ்வதை விரும்புகிறான் என்றும் தனக்கு மரணம் சம்பவிப்பதை அவன் விரும்பவில்லை என்றும் நான் ஆரம்பத்தில் கூறினேன். இப்படி மனிதன் மட்டும்தானா எண்ணுகிறான்? மனித இனம் மட்டும்தானா இப்படி விரும்புகிறது? இல்லவே இல்லை! உயிரினங்கள் அனைத்தும் இதே நிலையில்தான் இருக்கின்றன. அவை தங்கள் உயிரை விரும்புகின்றன. மரணத்தை வெறுக்கின்றன. இந்த மனப்பான்மையைவிட்டு அப்பாற்பட்ட எந்த உயிரினமும் உலகில் கிடையாது. அப்படி ஓர் உயிரினத்தைக் கற்பனைக் கண்களால் கூடக் காண முடியாது.

மனிதனின் இந்த மனப்பான்மைதான் அவனை இறைவன்மீது அன்பு கொள்ளச் செய்கிறது. ஏனெனில் இறைவன்தானே மனிதனுக்கு உயிரளித்தவன். அவன்தானே மனிதனுக்குப் பல இன்பங்களையும் உண்டாக்கித் தந்திருக்கிறான்?

ஒருவன் தன்னையும் தன் இறைவனையும் அறிந்து கொண்டு விட்டானாயின் அவன் இந்த முடிவிற்குத்தான் வருவான்! நேர்மையான மனப்பான்மை அவனை இந்த முடிவிற்கு இழுத்துக் கொண்டு வந்து விடும்.

''நான் ஒரு படைப்பு. நான் படைக்கப்பட்டவன். என்னைப் படைத்தவன் இறைவன். நான் உயிர் வாழ்வது, சிறப்படைவது, இன்பம் காண்பது ஆகிய யாவற்றிற்கும் இறைவனே மூல காரணம். இத்தனை உதவிகளைத் தந்த அவனை நான் எப்படி விரும்பாமலிருக்க முடியும்? எப்படி அவன்மீது அன்பு கொள்ளாமலிருக்க முடியும்? அவன் எதையும் உண்டாக்கும் ஆற்றலுள்ளவன். என்னை உண்டாக்கியவனும் அவனே. என்னை உயிர்வாழச் செய்திருப்பவனும் அவனே! இல்லையேல் என்னை அரை வினாடியில் அவனால் அழிக்க முடியும்! அந்தப் பேராற்றல் அவனிடம் எப்போதும் உண்டு. உயர்ந்த பண்புகளைப் படைத்து அவற்றின் உதவியால் என் வாழ்க்கையை அழகு படுத்துபவனும் அவனே. அவனைத் தான் நான் விரும்பவேண்டும். வேறு எதையும் நான் விரும்ப வேண்டியதில்லை. அவன்தான் அன்பிற்குரியவன். அவன் மீதுதான் நான் அன்பு செலுத்தவேண்டும். ஏனெனில் அவனில்லையேல் எதுவுமில்லை; நானுமில்லை....''

மனிதன் மார்தட்டிப் பேசலாம். தன் ஆரோக்கியத்தை நம்பிக்கொண்டு அவன் எதையும் செய்யலாம். ஆனால் உற்றுப்பார்த்தால் அவனால் இந்த உண்மையை மறுக்க முடியாது. மனிதன் படைக்கப்பட்டவனே தவிர தனக்குத் தானாக அவன் உண்டாகி விடவில்லை. உண்டாகவும் முடியாது. இறைவனின் அன்புப் பார்வை அவன்மீது படவில்லையாயின் அவன் பிறந்த மறுகணமே உயிர் நீத்திருப்பான். எத்தனை உயிர்கள் பிறந்த மறுகணமே மாண்டிருக்கின்றன! இறைவன் விரும்பவில்லையாயின் மனிதனை அவன் அங்கவீன முடையவனாகப் படைக்க முடியும். ஆக ஒவ்வொன்றும்-உலகிலுள்ள அத்தனையும் இறைவனின் அருளுக்குப் பிரதிபிம்பங்கள் என்பதை இப்போதாகிலும் உணர்ந்து கொள். அவனைத் தவிர்த்துள்ள ஒவ்வொன்றும் அவனுடைய ஆற்றலுக்குட்பட்டவை

என்பதை மறந்து விடாதே! நேர்மையான கருத்துகள் பல நாட்கள் உள்ளத்தில் தங்குவதில்லை.

தன் உள்ளமைக்கும் தன் வாழ்க்கைக்கும் இறைவன் ஒருவனே உதவியாளன் என்று ஒருவன் அறியும்போது அந்த இறைவனை அவன் விரும்புவதில் விந்தை என்ன? இறைவன் தான் உன் நாயன் என்று உனக்குத் தெரியும். அவன்தான் உன்னைப் படைத்தான் என்று நீ உணர்ந்து கொண்டு விட்டாய். உனக்கு ஆரோக்கியத்தையும் அவன்தான் கொடுத்திருக்கிறான். உனக்குரிய இன்பங்கள் அனைத்தையும் உண்டாக்கியவனும் அவனே என்று நம்புகிறாய்! இந்த நிலையில் அவனை நீ விரும்பவில்லையாயின்-அவனை உன் அன்பிற்குரியவனாக ஆக்கிக் கொள்ளவில்லையாயின் அது உன் அறியாமையைத் தவிர்த்து வேறென்ன? உன்னைப் பற்றியும் உன் இறைவனைப் பற்றியும் நீ சரிவர உணர வில்லை என்று நான் கூறுவேன். அன்பு என்பது அறிவால் ஏற்படக் கூடியது. இறைவனைப் பற்றி நீ அறியா திருக்கும்போது உனக்கு அவன்மீது அன்பு ஏற்பட எத்தகைய வழியுமில்லை. அறிவு வலுப்பட்டால் அன்பும் வலுப்படும். அறிவு குறையும்போது அன்பும் பலவீனமடையும்.

இதனால்தான் அறிஞர் ஹஸன் பஸ்ரீ (ரஹ்) அவர்கள் ''இறைவனை அறிந்தவன் அவனை விரும்புவான்; உலகை அறிந்தவன் அதை வெறுத்து விடுவான்'' என்று கூறியுள் ளார்கள். தன்னை விரும்பும் ஒருவன் தன் உள்ளமைக்குக் காரணமான இறைவனை எப்படி விரும்பாமலிருக்க முடியும்?

கொடிய வெயிலில் அகப்பட்டுக் கொண்டவன் நிழலை விரும்புகிறான். அதே சமயத்தில் அந்த நிழலுக்குக் காரண மான மரத்தையும் அவன் விரும்பத்தான் செய்கிறான். வியாதியால் இன்னலுறுபவன் தன் வியாதிக்குரிய மருந்தை விரும்புகிறான். அதேசமயத்தில் அந்த மருந்துக்குக் காரண மான வைத்தியனையும் அவன் விரும்பத்தான் செய்கிறான்.

இறைவனின் அருள் மரத்தின் நிழல், உலகெங்கும் பரவிக் கிடக்கிறது. ஆனால் அந்த நிழலை விரும்பும் நீ அந்த மரத்தை விரும்பவில்லை இன்பதை விரும்பும் நீ அதற்குக் காரணமான இறைவனை விரும்பவில்லை. விந்தை! அறியாமை! சூரியனி லிருந்து ஒளி வருவதுபோல, மரத்தி லிருந்து நிழல் உண்டாவது போல, இறைவனிடமிருந்து சகலமும் உண்டாகின்றன.

இது சாதாரண உதாரணம், இறைவனுக்கும் அவனுடைய படைப்புகளுக்கும் இடையிலுள்ள சம்பந்தத்தை இந்த உதாரணத்தின் மூலம் பொது மக்கள் உணர்ந்து கொள்வார்கள். அது போதும்,

2. அடுத்தபடியாக ஒரு மனிதன் தனக்கு உதவி புரிந்தவனை விரும்புகிறான்; அவனுக்கென்று தன்செல்வம் அனைத்தையும் செலவிடத் தயாராகிறான்; அவனுடைய எதிரிகளை நசுக்குகிறான்; அவனுக்கு ஏற்படும் இன்னல் களைத் தடுக்க முயல்கிறான்.

இந்த அன்பும் உண்மையில் இறைவனின் பக்கம்தான் திரும்புகிறது. ஏனெனில் எந்த மனிதனும் எந்த மனிதனுக்கும் உதவியளிப்பதில்லை. இறைவன்தான் மனிதனின் மூலம் உதவியளிக்கிறான். அவன் மனித இனத்திற்கு அளித்திருக்கும் உதவிகளையும் அருட் கொடைகளையும் வரம்பிட்டுக் கூற முடியாது. ''இறைவனின் அருட்கொடைகளை நீங்கள் எண்ண ஆரம்பித்தால் உங்களால் வரம்பு காணமுடியாது'' என்று திரு மறை கூறுகிறது. இதைப்பற்றி 'நன்றி' என்ற நூலில் விரிவாக எழுதி இருக்கிறேன்; அந்த நூலைப் படித்துணர்ந்து உண்மையை அறிந்து கொள். அவற்றை எல்லாம் இங்கு விவரித்துக் கொண்டிருக்க முடியாது. எனினும் மனிதனுக்கு மனிதனிடமிருந்து கிடைப்பதாகத் தோன்றும் உதவி உண்மையில் இறைவனிடமிருந்து வரும் உதவிதான் என்று மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நன்கு ஆராய்ந்து பார்த்தவர்களுக்கு இதன் உண்மை புலப்படும்.

ஒருவன் தன் செல்வமனைத்தையும் உனக்கு உதவியாக அளித்துவிட்டான் என்று வைத்துக்கொள். தன்னிடமிருந்த பொருள் யாவற்றையும் கொண்டு வந்து அவன் உன் காலடியில் குவித்து இவற்றை உன் விருப்பம்போல் செலவு செய்து கொள் என்று கூறிவிட்டதாகவும் வைத்துக் கொள். அப்போது நீ அதுபற்றி என்ன எண்ணுகிறாய்? இவை யாவற்றையும் உதவிகள் என்றுதானே எண்ணுகிறாய்? இதுதான் நீ செய்யும் முதல் தவறு. இந்த எண்ணத்தை உடனே மாற்றிக் கொள். அது அவனுடைய உதவியல்ல! இறைவனின் உதவி; மனிதன் வாயிலாக்க் கிடைத்த மாமன்னனின் உதவி! ஏனென்றால் பொருளைப் படைத்தவனும், உன்மீது அவனுக்கு அன்பை ஏற்படுத்தியவனும், பொருளைக் கொண்டுவந்து உன் காலடியில் குவிக்குமாறு நிர்பந்தப்படுத் தியவனும் அந்த மாமன்னன்தான். அந்த நிர்ப்பந்தத்தினால் உந்தப்பட்டுத்தான் அந்தச் செல்வந்தன் உனக்கு உதவி புரிந்திருக்கிறான்.

உனக்குக் கிடைத்தது இறைவனின் உதவி; அதற்கு அந்தச் செல்வந்தன் உபகரணம். அந்தச் செல்வந்தனால் கூட அந்த உதவியைத் தடுத்து நிறுத்த முடியாது. நீர் பள்ளத்தை நோக்கிப் பாய்வது போல இறைவனின் உதவி அந்த மனிதனின் வாயிலாக உன்னை நோக்கிப் பாய்கிறது. அவன் உனக்கும் உன் இறைவனுக்கும் இடையில் ஓர் உபகரணமாக அமைந்திருக்கிறான் என்ற காரணத்தினால் அவனுக்கு நீ நன்றி செலுத்தலாம்; குற்றமில்லை. இதைத் தவிர்த்து அவன்தான் உதவியாளன் என்று எண்ணினால் அது உன் அறியாமையே! காரணம் என்ன? மனிதன் தன்னைத் தவிர்த்து வேறு யாருக்கும் உதவி புரிய மாட்டான். அப்படி ஒருவன் உதவி செய்தால் அதற்கு இரண்டு காரணங்கள் : ஒன்று, அவன் தான் செய்த உதவியின் நன்மையை மறுமையில் எதிர்பார்ப்பான் அல்லது இம்மையிலேயே அதன்

பிரதியனுகூலத்தை எதிர்பார்ப்பான். பெருமை, புகழ், பிரபலம், கொடைவள்ளல் என்ற பெயர், மக்களின் கவனத்தைத் தன்பால் திருப்புதல் - இப்படி ஏதேனும் ஒரு காரணத்திற் காகத்தான் ஒரு மனிதன் மற்றவனுக்கு உதவி செய்ய முடியும். பயனற்ற காரியத்திற்காகப் பணத்தை ஏவனும் செலவிட மாட்டான்; தன் பொருள்களை எவன்தான் கடலில் போடத் துணிவான்? கடலில் பொருளைக் கொட்டுவதில் எத்தகைய பயனுமில்லை என்று அவனுக்குத் தெரியும். எனவே பயனற்ற இச்செயலிலிருந்து விலகிக் கொள்கிறான். இதேபோன்று வேறு எவ்வகையிலும் தன் செல்வத்தைப் பாழாக்க எவனும் விரும்பமாட்டான். தன் உதவி வீண் போவதை யார்தான் விரும்புவார்கள்? மனிதன் சுயநலப் பிராணியல்லவா?

ஒருவன் உனக்கு உதவி செய்யும்போது அவன் உன்னிடமிருந்து பல்வேறு நன்மைகளை எதிர்பார்க்கிறான். அவற்றை எல்லாம் அவன் வெளியில் சொல்லிக் கொள்ள மாட்டான். சுயநலத்தை யாரும் வெளியில் காட்டிக் கொள்வ தில்லை. அந்த நன்மைகள் உன்னிடமிருந்து எப்படியும் அவனுக்குக் கிடைத்துவிடும். ஒருவனிடமிருந்து நீ உதவி பெற்ற பிறகு என்ன செய்வாய்? பேசாமல் இருந்து விடுவாயா? அப்படியிருக்கத்தான் முடியுமா? அவனுடைய உதவியைப் பற்றி நாலுபேரிடம் கூறுவாய். அவர்கள் தங்களுக்குத் தெரிந்த நாலுபேரிடம் அதைக் கூறுவார்கள். கொடைவள்ளல் என்பார்கள். அவன் பெயர் பிரபலமடையும். அவனிடமிருந்து உதவி பெறுவதற்கேனும் மக்கள் அவனை விரும்புவார்கள்.

இத்தனை நன்மைகள் அவனுக்குப் போதாதா? அவன் எதிர்பார்த்த நன்மை கிட்டிவிட்டது. அதுபோதும்!

அவன் உனக்கு உதவி புரிந்தபோது "இந்த உதவியை யாரிடமும் கூறவேண்டாம். அதை நான் விரும்பவில்லை" என்று சொல்லிவிட்டதாகவே வைத்துக்கொள். அப்போதா கிலும் நீ சும்மாயிருப்பாயா? கண்டிப்பாய் இருக்கமாட்டாய்!

உனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் அவனைப் பற்றி மர்ம உரையாடல் நடத்துவாய். "அவரைப் போன்று ஒருவர் கிடைப் பது கஷ்டம். எத்தனை பெருந்தன்மை! அவர் பெரிய கொடை வள்ளல். இடக் கைக்குத் தெரியாமல் வலக் கையால் கொடுக்கிறவர்! தம் டெயரை வெளியில் கூறவேண்டாம் என்று சொல்லிவிட்டார்' என்று நீ பறையடிப்பாய். இதிலே உனக்கு உற்சாகமுண்டு. அவனுக்கு இதனால் இருமடங்கு பயனுண்டு. அதை அவன் மறைமுகமாக வரவேற்கிறான்.

இந்த நன்மைகள் எதுவும் ஏற்படாமற் போய்விட்டாலும் அவன் யோசிக்க வேண்டியதில்லை. ஏனெனில் அவனுடைய உதவிக்குரிய நன்மை மறுமையில் அவனுக்குண்டு. இந்த மறுமைப் பயனை எதிர்பார்த்து எத்தனையோபேர் பொருளை வாரிச் செலவிடுகிறார்கள்; ஏழைக்ளுக்கு ஒத்தாசை புரிகிறார்கள். இதை நீயும் பார்த்திருப்பாய்.

இவற்றிலிருந்து நீ என்ன அறிகிறாய்? மனிதனுக்கு மனிதன் சுயநலமில்லாமல் உதவி புரிய முடியாது என்று அறிகிறாயல்லவா?

இப்படிப் பார்க்கும்போது உன் உதவியாளனுக்கு நீ நன்றி செலுத்த வேண்டியதில்லை என்று எண்ணத் தோன்றுகிறது. இதற்கு இரண்டு காரணங்கள்:

1. உன் உதவியாளன் நிர்ப்பந்தத்தினாலேயே உனக்கு உதவி புரிகிறான்: அத்தகைய நிர்ப்பந்தத்தை இறைவன்தான் ஏற்படுத்துகிறான். எனவே, அந்த மானிடனால் உனக்கு உதவி புரியாமல் இருக்கவே முடியாது. இந்த உதவியில் அவனுக்கு முழு உரிமை கிடையாது. அரசனின் கட்டளையை சிரமேற் கொண்டு செயல் புரியும் சேவகனைப்போல் அவன் இறை வனின் கட்டளையை ஏந்திக் கொண்டு உன்பால் வருகிறான்; உனக்கு உதவி புரிகிறான். அரசனாகிய இறைவனுடைய கட்டளைக்கு முரண் புரியும் துணிச்சல் பணியாளனுக்கும் கிடை யாது. இது முதல் காரணம்.

2. உன் உதவியாளன் பிரதிபலனை எதிர்பார்க்கிறான். தன் உதவியைவிட அதிகமான அளவில் அவன் பிரதிபலனை எதிர்பார்க்கிறான். ஒரு கடையில் ஏதேனும் ஒரு பொருளை நீ பணம் கொடுத்து வாங்குகிறாய் என்று வைத்துக் கொள்; அப்போது நீ கடை முதலாளியை உதவியாளன் என்று எண்ணுவாயா? அப்படி எண்ணத்தான் முடியுமா? கண்டிப்பாய் முடியாது. ஏனெனில் அவன் உன்னிடம் பிரதிபலனை- பணத்தை எதிர்பார்க்கிறான். தன் சரக்கை விட அதிகமாகப் பணத்தை அவன் விரும்புகிறான், எதிர்பார்க்கிறான். லாப மில்லாமல் யார்தான் வியாபாரத்தில் ஈடுபடுவார்கள்? மார்க்கத்திற்கென்று பெரும்பொருள் செலவிட்ட அரசர்களின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. அவர்கள் தங்கள் செயலுக்காக தாங்கள் செலவிட்ட பொருளுக்காக மறுமையில் கிடைக்கும் பெரும் பேறை எதிர்பார்க்கிறார்கள்.

இவற்றையெல்லாம் எக்காரணம் கொண்டும் உதவியாகக் கொள்ள முடியாது. உதவி என்ற பெயர் இவற்றில் எதற்கும் பொருந்தாது. இறைவன் ஒருவனுக்கே உதவியாளன் என்ற பெயர் பொருந்தும். ஏனெனில் அவன் மக்களுக்கு உதவியளிக்கிறான். எனினும் பிரதிபலனாக அவர்களிடமிருந்து அவன் எதையும் எதிர்பார்க்கவில்லை. உதவி, கொடை என்ற வார்த்தைகளை இறைவனைத் தவிர்த்து வேறு யாருடனும் இணைத்துக் கூற முடியாது. உதவி என்று ஒன்று இருந்தால் அதுஇறைவனிடமிருந்துதான் இருக்க வேண்டும். கொடை என்று ஒன்று இருந்தால் அது வல்லவனிடமிருந்துதான் உருவாக வேண்டும். அவன்தான் உதவியாளன்! அவன்தான் கொடை வள்ளல்!

இப்படியிருக்க உண்மையை அறிந்தவன் இறைவனைத் தவிர்த்து வேறு யாரைத்தான் விரும்பப் போகிறான். சுயநலம் நிறைந்த மனிதனையா அவன் தன் அன்பிற்குரியவனாக ஆக்கப் போகிறான்? கண்டிப்பாய் முடியாது. இறைவன்

தனித்தவன்; அன்பிற்குரிய தயாளன். அவனை எப்போதும் நீ விரும்பு. இல்லையேல் உன் அறியாமையைப் பறை சாற்றியவனாவாய்.

3. அடுத்தபடியாக ஒரு மனிதன் நல்லவன் என்ற காரணத்தால் மற்றவனை விரும்புகிறான்; கெட்டவன் என்ற காரணத்தால் வெறுக்கிறான். இப்படி ஒருவனை நீ விரும்பும் போது அந்த அன்பு அவன் பொதுவாக நல்லவன் என்ற காரணத்தினால் அமைந்திருக்குமே தவிர அவன் உனக்கு உதவி செய்தான் என்ற காரணத்திற்காக இருக்காது. அவனிடமிருந்து நீ எத்தகைய உதவியையும் பெறாவிட்டாலும் அவன் பொதுவாக அருங்குணம் கொண்டவனாக இருப்பதால் உன்னுள்ளத்தில் அவன் மீது அன்பு பொங்குகிறது.

நீதி தவறாது அரசோச்சிய மன்னர்களைப் பற்றியும் கலீபாக்களைப்பற்றியும் நீ கேள்விப்படும்போது அவர்களை நீ விரும்புகிறாய். அவர்களின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே உன்னுள்ளத்தில் அவர்கள்மீது அன்பு பொங்குகிறது. இத்தனைக்கும் அவர்களிடமிருந்து நீ எந்த நன்மையையும் அடையவில்லை; எவ்விதப் பயனும் பெறவில்லை.

இதேபோன்று மக்களைப் பிழிந்து சக்கையாக்கிய கயவர்களைப் பற்றியும் தற்பெருமை கொண்ட அரசர்களைப் பற்றியும் நீ அறியும்போது அவர்களை வெறுக்கிறாய். அவர்களின் பெயர்களைக் கேட்ட மாத்திரத்திலேயே முக்கத்தைச் சுளிக்கிறாய். வெறுப்புணர்ச்சியை வெளியில் காட்டுகிறாய். இத்தனைக்கும் அவர்களிடமிருந்து நீ எத்தகைய இன்னலையும் அடையவில்லை. இந்த வகையையொட்டி ஏற்படும் அன்பு சுயநலமற்றது. இதுபோன்ற அன்பிலுங்கூட இறைவனுக்குப் பங்கு உண்டு. இன்னும் சொல்லப்போனால இந்த அன்பிற்கும் இறைவன் ஒருவனே ஏகபோக உரிமையாளன் என்று துணிந்து கூறிவிடலாம். ஏனெனில் இறைவன்தான் எல்லாவற்றையும் படைத்தவன்.

நீதி தவறாத அரசர்களையும் குர்ஆனைக் கையிலேந்தி ஆட்சி புரிந்த கலீபாக்களையும் அவன்தான் படைத்தான். அவன் பேராற்றல் கொண்டவன். அவன் மக்களைப் படைத்து அங்கங்களைச் சீர்படுத்தினான். பின்னர் அவர்களின் வாழ்க்கைக்கு அவசியமானவற்றை அவர்களுக்களித்தான். அவன்தான் புகழுக்குரிய செயல்களைப் புரியுமாறு பணித்தான். எனவே அவன்தான் அன்பிற்குரியவன். அவன் ஆற்றலே படைப்பினங்களின் வாயிலாகப் பாரில் பரவி விரிகிறது! இந்த மூன்றாம் பிரிவிலும் இறைவனுக்கே முதலிடம் கிடைக்கிறது என்று உணர்ந்து கொண்டுவிட்டாய்.

4. மனிதன் அழகை விரும்புகிறான்; அதிலிருந்து ஏற்படும் பலனையல்ல! இதைப் பற்றி முன்னர் ஓரளவு விவரித்திருக்கிறேன். அழகின் பக்கம் மனிதனின் உள்ளம் இயற்கையாகவே சாய்கிறது என்று நான் கூறியதை இதுவரை மறந்திருக்கமாட்டாய் என்று எண்ணுகிறேன்.

அழகை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். புற அழகு; அக அழகு. புற அழகை யாரும் அனுபவிக்கலாம். அதைப் புறக்கண்களாலேயே பார்த்தறியலாம். இதை நீயும் அறியலாம்; நானும் அறியலாம்; சிறு குழந்தைகள் கூட இதை அறிய முடியும். ஏன்? மிருகங்களுக்குகூட இதை அறியும் ஆற்றல் உண்டு. ஏனெனில் மிருகங்களுக்கும் புறக்கண்கள் உண்டு. இது புற அழகைப் பற்றிய விஷயம்.

இவை அனைத்தும் அக அழகின் விஷயத்தில் தவறாகி விடுகின்றன. அக அழகைக் கண்களால் பார்த்தறிய முடியாது. உள்ளத்தின் ஆற்றலால் மட்டுமே அதைக் காண முடியும். அக அழகை அனுபவித்து மகிழும் பேறு எல்லோருக்கும் கிடைத்து விடாது. மனோ தெளிவுடைய அறிஞர்கள் அதை அனுபவிப் பார்கள். மற்றவர்களுக்கு அது சாத்தியமில்லை. ஏனெனில் இதைப் புறக்கண்களால் கண்டு களிக்க முடியாது.

உதாரணமாக, இறைத் தூதர்களையும் இறையன்பைப் பெற்ற அறிஞர்களையும் உயர்ந்த பண்புடையவர்களையும் நாம் விரும்புகிறோம். இவர்களில் எல்லாம் நாம் அக அழகைத்தான் பார்க்கிறோம். ஏனென்றால் இவர்கள் அனைவரும் அழகிய தோற்றம் கொண்டவர்களாகவும் அழகுடைய அங்கங்களைப் பெற்றவர்களாகவும் இருப்பார்கள் என்று நிச்சயமாகக் கூறமுடியாது. குரூபியானவர்களில் எத்தனையோ பேர் ஒப்பற்ற அறிஞர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். அண்ணல் நபியவர்களையோ, அபூபக்கர் (ரலி) அவர்களையோ இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்களையோ அவர்களின் வதன அழகைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்களின் ஆத்மீக அழகைத்தான் அவன் விரும்புகிறான். அவர்கள் புரிந்த காரியங்கள் அவர்களின் மனோ நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன! செயல்கள் உள்ளத்தின் பிரதி பிம்பங்கள். ஒரு மனிதனின் செயலைப் பார்த்து அவனுடைய மனோவேகத்தைக் கண்டுபிடித்துவிடலாம். சிறந்த நூலைப் பார்த்து சிறந்த எழுத்தாளனைக் கண்டுபிடித்து விடலாம். கவிதையின் தராதரத்தைக் கொண்டு கவிஞனைக் கண்டு கொள்ளலாம்.....

இவ்வாறு ஒரு செயலைப் பார்த்து அதைச் செய்தவனின் அக அழகைக் கண்டுபிடித்துவிடுவது மிகவும் சாதாரண காரியம். நம் அன்பிற்குரிய முன்னோர்கள் சீறந்த செயல்களைப் புரிந்தார்கள்; உலகமே வியக்குமாறு அறவழி நடந்தார்கள். அவர்களின் அக அழகு மானிட இனத்தையே ஈர்க்கும் ஆற்றல் கொண்டது. அந்த பெருந்தகைகளை நாம் விரும்புவதற்கு மூன்று சிறப்பம்சங்கள் காரணங்களாக அமைகின்றன.

1. அவர்கள் அறிவில் சிறந்து விளங்கினார்கள். மத வியலான அறிவு அவர்களிடம் அடைக்கலப்பட்டிருந்தது. இறைவனைப் பற்றியும் அவன் பேராற்றல்களைப் பற்றியும் அவர்கள் நம்மைவிட நன்கு அறிந்தவர்கள்.

2. இவர்கள் தங்களைச் சீர்திருத்திக் கொண்டதோடு நின்றுவிடாமல் பொதுமக்களையும் சீர்திருத்தும் பணியில் ஈடுபட்டுச் செயலாற்றினார்கள். வீரம், தயாளம், அன்பு, பொதுநலம் முதலிய அருங்குணங்கள் அவர்களிடம் என்றும் இருந்தன. பொது நலத்திற்காகப் பொருள் அனைத்தையும் செலவிட்டவர்கள் இவர்களில் எத்தனையோ பேர். சிறந்த நற்பண்புகளுக்கு இவர்கள் பிறப்பிடமாக விளங்கினார்கள்.

3. இவர்கள் மக்களின் மனோ வியாதியை அகற்ற அரும்பாடுபட்டார்கள், ஆன்மீகத்தின் இன்பத்தைப் போதித் தார்கள். இறை வணக்கத்தின் சிறப்பை எடுத்துரைத்தார்கள். இத்தகைய உயர்ந்த பண்புகளே நம்மை அவர்கள் மீது அன்பு கொள்ளச் செய்கின்றன. இவற்றைக் கொஞ்சம் விரிவாக ஆராய்வோம்.

✪ ✪ ✪

5. இறைவனின் அறிவு

அண்ணலவர்களும் அவர்களின் அன்பர்களும் நம்மைவிட அறிவிற் சிறந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்களின் அறிவு இறைவனின் அறிவுக்கு முன்னால் எம்மாத்திரம்? அவன் எல்லாம் அறிந்த வல்லவனாயிற்றே! வானம் பூமியிலுள்ள எந்த ஒன்றும்அவன் அறிவலிருந்து தப்ப முடியாது. அவன் மக்களை மட்டுமல்ல, தன் படைப்புகள் யாவற்றையும் அறிகிறான். உங்களுக்கு அளிக்கப்பட்ட அறிவுச் செல்வம் சொற்பமானது என்றும் அவன் மக்களைப் பார்த்துக் கூறிவிட்டான். ஒரு கொசுவை அல்லது ஈயை அவன் எவ்வாறு படைக்கிறான் என்று ஆராய்வதற்காக விண்ணக மக்களும் மண்ணக மக்களும் ஒன்று கூடினாலும் அவர்களால் நூற்றில் ஒரு பாகத்தைக் கூடக் கண்டு பிடிக்க முடியாது. அத்தகைய ஆற்றலுடையவன் அவன். எனினும் அவன் ஒரு சிலருக்கு அறிவுச் செல்வத்தை அருள்கிறான். படிப்பினை மூலமாகச் சிலருக்கு அவன்

அறிவை ஊட்டுகிறான். ''அவன் மனிதனைப் படைத்து அவனுக்கு படிப்பித்தான்'' என்று திருமறை கூறுகிறது.

இப்போது விஷயத்திற்கு வருவோம். அறிவு என்பது அன்பு செலுத்துவதற்குரிய அம்சம் என்று மேலே பார்த்தோம். அந்த அறிவு எல்லோரையும் விட இறைவனிடம் தான் அதிகமாக இருக்கிறது. அவன் பேரறிஞன். அவனுடைய அறிவாற்றலுக்கு முன்னால் இவ்வுலகிலுள்ள அறிஞர்கள் அனைவரும் அறிவிலிகளே! எனவே அறிவுக்காக ஒருவன் அன்பு செலுத்த எண்ணும்போது அவன் இறைவன் மீதுதான் அன்பு செலுத்த வேண்டும். அவனைவிடச் சிறந்த அறிவாளி யார்? அவன் முக்காலமும் அறிந்தவன்; காலத்தையும் இடத்தையும் விட்டு அப்பாற்பட்டவன். அறிஞனையும் அறிவிலியையும் அறிந்து கொண்ட ஒருவன் எக்காரணம் கொண்டும் அறிவிலியை விரும்பமாட்டான். ஒரு மனிதன் என்னதான் அறிவாளியாயிருந்தாலும் அவனுடைய அறிவுச் செல்வம் ஒரு வரம்பிற்குட்பட்டதுதான். ஆனால் இறைவனின் விஷயத்தில் இது பொருந்தாது. அவனுடைய அறிவு வரம் பற்றது; முடிவற்றது.

எனவே அறிவுக்காக நீ யாரையும் விரும்ப எண்ணினால் இறைவனையே விரும்பு. அவன்தான் உண்மையான அறிஞன். அடுத்தபடியாக, அண்ணலவர்களையும், அவர் களின் அருமைத் தோழர்களையும், நீதி வழுவாது ஆட்சிபுரிந்த கலீபாக்களையும் நாம் விரும்புகிறோம். அவர்களிடம் குடி கொண்டிருந்த உயர்ந்த பண்புகள் நம்மைக் கவர்கின்றன. வீரம், சகிப்புத்தன்மை, பொதுநலம் ஆகியவை அவர்களின் பிறவிக் குணங்களாயிருந்தன.

காலித் (ரலி) அவர்களைப் பற்றிய வரலாறு அவர்களுக்கு வீரர் என்ற பட்டத்தையளிக்கிறது. மறுகணமே அவர்கள்மீது நமக்கு அன்பு உண்டாகிவிடுகிறது. அவர்களை நாம் நேரில் காணவில்லை என்ற காரணத்தால் இந்த அன்பு தடைப்படாது.

ஏனெனில் இது அக அழகைப் பொறுத்த விஷயம். அக அழகிற்கும் முக அழகிற்குமிடையில் எத்தகைய சம்பந்தமும் கிடையாது. குரூபிகளும் வீரர்களாயிருந்திருக்கின்றனர்.

இந்த ஆற்றல்கள் யாவும் இறைவனிடமிருந்து வந்த செல்வங்கள் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. இத்தகைய ஆற்றல்களுக்காக நீ ஒரு மனிதனை விரும்ப எண்ணும்போது இறைவனையே விரும்பு. ஏனெனில் அவனிடம் வரம்பிட முடி யாத பல ஆற்றல்கள் உள்ளன; வீரத்தை உண்டாக்கியவனும் அவன்தான். தவிர, அவன் ஆற்றல் என்றைக்குமே குறையாது. மரணம் அவனை அண்டாது. முதுமை அவனை நெருங்காது. வியாதி அவனைப் பீடிக்காது. அவனை எந்தச் சக்தியாலும் பலவீனப்படுத்த முடியாது. அவனால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை. விண், மண், விண்மீன்கள், சந்திரன், சூரியன் யாவும் அவனுடைய சக்திக் கரங்களில் கட்டுண்டிருக்கின்றன. மலை, கடல், மின்னல், இடி முதலிய எவையும் அவனுடைய சக்தியிலிருந்து தப்பிவிட முடியாது. அவனுடைய ஆற்றல் களை எல்லாம் வர்ணிக்க முடியாது. பலம் பொருந்திய அரசன் ஒருவனைச் சாதாரணமான ஒரு கொசுவினால் கொல்லும் ஆற்றல் அவனுக்குண்டு!

முன்னோர்களை அவர்களின் ஆற்றலுக்காக நீ விரும்பும் போது உண்மையில் அந்த அன்பிற்குரியவன் இறைவன் ஒருவனே என்பதை இப்போதாகிலும் உணர்ந்து கொண்டி ருப்பாய் என்று எண்ணுகிறேன். நீ எந்தச் சக்தியை விரும்பு கிறாயோ, அதைவிட அபாரமான சக்தி இறைவனிடமுண்டு. சக்தி-ஆற்றல் என்று ஒன்று இருந்தால் அது இறைவனுடைய ஆற்றலாகத்தான் இருக்க வேண்டும். அவன் ஒப்பற்ற சக்தியாளன். அத்தனை சக்தி அவனைத் தவிர்த்து வேறு யாருக்கும் கிடையாது.

அடுத்தபடியாக, முன்னோர்கள் ஆத்மீக வழியில் பெரிதும் முன்னேற்றமடைந்திருந்தார்கள் என்ற காரணத்தினால்

அவர்களை நாம் விரும்புகிறோம். இழிவிற்குரிய தன்மைகளை அவர்கள் அறுத்தெறிந்தார்கள், புகழுக்குரிய பண்புகளை உண்டாக்கிக் கொண்டார்கள். கேவலமான செயல்களுக்கும் மட்டரகமான உணர்ச்சிகளுக்கும் அவர்கள் அடிமைப்பட வில்லை. அவர்களின் உள்ளங்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்தன.

இதன் காரணமாகவே மக்கள் அவர்களை விரும்பு கிறார்கள்; நீயும் நானும் விரும்புகிறோம். இவர்கள் தங்களை ஏன் இப்படி திருத்திக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? இறைவனின் அன்பைப் பெறுவதற்காக! நம்முடைய அன்பைப் பெறுவதற்கல்ல! இதை நீ என்றைக்கும் மறந்து விடாதே. ஒரு மனிதன் என்னதான் சிறந்த பண்புகளைப் பெற்றிருந்தாலும் அவனிடம் குறிப்பிட்ட சில குறைபாடுகள் இல்லாதிருக்க முடியாது. மனிதன் இறைவனின் ஆற்றலுக்கெதிரில் வெறும் மரக்கட்டையைப் போன்றவன்: அவனின் ஒப்புயர்வற்ற தனிச் சக்திக்குக் கட்டுப்பட்டவன்; அதன் அடிமை; இறைவன் விரும்பாவிடில் அவனால் தன் கையைக்கூட- ஏன் ஒரு விரலைக் கூட அசைக்க முடியாது. இது மனிதனின் குறைபாடு. இதை அகற்றவும் முடியாது.

இந்தக் குறைபாடுகள் இறைவனிடம் கிடையாது. அவன் எல்லாவகையிலும் சிறந்தவன். குறை என்பதையே அவனிடம் காண முடியாது; அவன் பூரணத் தன்மையுடையவன். அவன் எந்தச் சக்திக்கும் கட்டுப்பட்டிருக்கவில்லை. அவனுடைய எந்த ஆற்றலையும் யாராலும் தடுக்கமுடியாது. அவன் படைப்பவன்; படைக்கப்பட்டவன் அல்ல. அவன் எஜமானன்; உன்னையும் என்னையும் போன்று அடிமையல்ல. அவனுடைய சிறப்பை எழுத ஆரம்பித்தால் நூல் நீண்டு விடும். அதை விவரித்து நூலை விரிவுபடுத்துவதை நான் விரும்ப வில்லை. ஒவ்வொரு பொருளுக்கும் தனித் தன்மைகள், சிறப்பம்சங்கள் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் விட இறைவனின் தனித் தன்மைகள், சிறப்பம்சங்கள் உயர்ந்தவை; அன்பிற்குரியவை.

கழுதையைவிடக் குதிரை உயர்ந்தது; குதிரையைவிட மனிதன் மேலானவன், இறைவனுக்கெதிரில் அந்த மானிடன் அற்பத் துரும்பு போன்றவன்; தூசிபோன்றவன். இறைவனைத் தவிர்த்துள்ள சகலவற்றிலும் குறைபாடுகள் உள்ளன. ஆனால் இறைவனுக்குமேல் யாதொரு சக்தியும் கிடையாது. அவனே எல்லாவற்றையும் விட மேலானவன். குறைபாடற்றவன்!

இதிலிருந்து நீ என்ன அறிகிறாய்? அன்பு ஏற்படுவ தற்குரிய அழகம்சங்கள் அனைத்தும் இறைவனிடமே அடைக் கலப்பட்டிருக்கின்றன என்று அறிகிறாயல்லவா? இப்போது நபியவர்களின் கருத்தை எண்ணிப்பார். இறைவன் அழகன்; அழகை விரும்புபவன் என்று அவர்கள் கூறியிருப்பது எத்தனை பொருத்தம்! அழகை அவன் விரும்பாவிடில் உலகில் இத்தனை அழகினங்களையும் உண்டாக்கியிருக்க முடியுமா? விரும்பாத ஒன்றைச் செய்யுமாறு அவனை யாரும் நிர்பந்தப் படுத்த முடியாது. நீ அழகை விரும்ப எண்ணினால் இறைவனையே விரும்பு, அவனே பூரண அழகுடையவன். அன்பிற்குரிய அழகன் அவன் ஒருவனே!

அவன் தனித்தவன் எதிர்பில்லாத பேரரசன்; எவருடைய தயவும் தேவையில்லாத பணக்காரன்; விரும்புவதைச் செய்யும் சர்வ சக்தன்; எண்ணியதைத் தீர்ப்பளிக்கும் நீதிபதி; விண்ணகத்திலும் மண்ணகத்திலும் ஒரு சிறு துரும்பையும் விடாது கண்காணிக்கும் பேரறிஞன்: அன்பாளன். அவனுடைய தீர்ப்பை எதிர்க்கும் ஆற்றல் யாருக்கும் கிடையாது. அட்டகாசம் புரிந்த அரசர்களின் கழுத்துகள் அவனுடைய பிடியிலிருந்து தப்ப முடியாது; அவன் பேராற்றலை அறியும் விஷயத்தில் உள்ளங்கள் திகைக்கின்றன. அதை விவரிக்கும் விஷயத்தில் நாவுகள் தடுமாறுகின்றன. ''இறைவனே! உன் ஆற்றல் மகத்தானது; விவரிக்க முடியாதது! என்று பெரியோர்கள் தலை குனிந்தனர்: வல்லவனே! நீ எப்படி இருக்கிறாயோ அப்படி எங்களால் புகழ முடியவில்லையே!'' என்று அண்ணலவர்கள் அங்கலாய்த்தார்கள்.

அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறினார்கள்; ''இறைவனின் பேராற்றலை அறிய முடியவில்லை என்று ஒப்புக் கொள்வதும் ஒரு வகையில் அறிவுதான்!

வல்லவனே! உன்னைப் புகழமுகிறேன். உன் ஆற்றலை விவரிக்கும் தகுதி இந்தச் சிறியோனுக்கு ஏது? நீ மன்னன்; நான் உன் அடிமை!''

இறைவன் முழுக்க முழுக்க அழகம்சம் பொருந்தியவன் என்பதை நீ அறிந்து கொண்டுவிட்டாய். அப்படியானால் அவனைத் தவிர்த்து வேறு யாரையேனும் நீ விரும்பலாமா? அன்பிற்குரியவன் இறைவன் ஒருவனே! இதை உள்ளத்தில் பதித்துக் கொள்!

✪ ✪ ✪

6. இன்பங்களில் உயர்ந்தது

இன்பம் என்பது உணர்ச்சியைப் பொறுத்து உண்டாகிறது. மனிதனிடம் பல்வேறு உணர்ச்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றிற்கு உணவு கிடைக்கும்போது இன்பம் உண்டாகிறது.

இந்த உணர்ச்சிகளை எல்லாம் இறைவன் வீணாகப் படைத்து விடவில்லை; அப்படி நீ எண்ணி விடாதே! அவன் எதையும் வீணாகப் படைக்கவில்லை. பல நன்மைகளைக் குறிக்கோளாய்க் கொண்டுதான் அவற்றைப் படைத்திருக்கிறான்.

கோபம் என்ற உணர்ச்சியைப் படைத்தான். இதனால் நம் எதிரியைத் தாக்குகிறோம்; வஞ்சம் தீர்க்கிறோம், இவ்வாறு எதிரியைத் தாக்குவதிலும் வஞ்சம் தீர்ப்பதிலும் கோபக் காரனுக்கு ஒருவித இன்பம் உண்டு என்று எல்லோருக்கும் தெரியும். எதிரியைத் தாக்குவதும் வஞ்சம் தீர்ப்பதும்தான் கோப உணர்ச்சியின் உணவுகள். எனவே உணவு கிடைக்கும் போது இன்பம் உண்டாகிறது.

உணவாசையை இறைவன் படைத்தான். வாழ்க்கைக்கு அவசியமான உணவை உட்கொள்வதற்கு இந்த உணர்ச்சி பயன்படுகிறது. ஆசை இல்லையேல் யாரும் உணவருந்தப் போவதில்லை. இந்த உணர்ச்சிக்கு உணவு கிடைக்கும்போது இன்பம் உண்டாகிறது.

இதேபோன்று பார்வை, கேள்வி, முகர்வு முதலிய புலனுணர்ச்சிகளுக்கும் தனித் தனியே சில உணவு வகைகள் இருக்கின்றன. அவற்றை அவை அடையும்போது இன்பம் உருவாகிறது.

மேற்குறிப்பிட்ட உணர்ச்சிகளால் இன்பம் ஏற்படுவது போல சில சமயங்களில் துன்பமும் ஏற்படுகிறது. உன்னை ஒருவன் திட்டுவதை நீ கேட்டால் உன் மனம் புண்படாமலிருக்குமா? கண்டிப்பாய்ப் புண்படும். இது தெளிவான விஷயம்.

இதேபோன்று உள்ளத்திற்கும் ஓர் ஆற்றல்- உணர்ச்சியுண்டு. அதற்கு இறையொளி என்று பெயரிடலாம். ''இறைவன் அவர்களின் உள்ளங்களை இஸ்லாத்திற்காக விரிவாக்கிவிட்டான். அவர்கள் தங்கள் நாயனின் ஒளியில் இருக்கிறார்கள்'' என்று திருமறை கூறுகிறது. தவிர, பகுத் தறிவு என்றும் அதற்குப் பெயரிடலாம். அகப் பார்வை என்பதும் அதன் பெயர்தான். நம்பிக்கையொளி என்று பெயரிடுவோரும் உண்டு.

பெயர்கள் பலதரப்படுகின்றன. வெறும் பெயர்களைக் கட்டிக் கொண்டு அழுவது அறிஞர்களின் வேலையல்ல. அந்தப் பெயர்களைப் பற்றி நான் விரிவாக எழுதப் போவதில்லை. பெயரைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அது எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும். அதன் பொருளைத் தான் நாம் கவனிக்க வேண்டும். இது நம் கொள்கை!

இந்தக் கொள்கைக்கு மாறுபட்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பெயர்கள் பலதரப்படுவது போல் அவற்றின்

பொருள்களும் பலதரப்படுகின்றன என்று பலவீன மதியுடையவர்கள் எண்ணுகிறார்கள். இவர்கள் பெயரை வைத்துக் கொண்டு பொருளைத் தேடுபவர்கள். இவர்களுக்குப் பொருளை வைத்துக் கொண்டு பெயர் அமைக்கும் ஆற்றல் கிடையாது!

உள்ளம் என்பது மேலே குறிப்பிட்ட உணர்ச்சிகள் யாவற்றிற்கும் முற்றிலும் மாறுபட்டது; உடலின் அங்கங்களை விட்டுத் தனித்தது. அந்த உள்ளத்தினால்தான், கற்பனையால் காணமுடியாததும் உணர்ச்சிகளால் பார்க்க முடியாததுமான அறிவுகளை அறிய முடியும். அந்த உள்ளம்தான்-அதன் ஆற்றல்தான் மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையில் பாகுபாடு செய்கிறது. இந்த உலகின் உண்மையுருவத்தை அறிவதும் அதைப் படைத்த நாயனை அறிவதும் அதன் வேலைகளே! ஒவ்வொன்றின் அந்தரங்கத்தையும் அறிவதற்காகவே உள்ளம் படைக்கப்பட்டிருக்கிறது. அத்தனை சக்தி அதற்கு உண்டு. இந்த உள்ளத்திற்குரிய உணவு என்ன தெரியுமா? அறிவு! அறிவு கிடைக்கும் போது அது இன்பமடைகிறது-மற்ற புலன்கள் தங்களுக்குரிய உணவு கிடைக்கும்போது இன்பமடைவது போல்!

அறிவுடைய மனிதன் தன் அறிவு குறித்து இன்பமடைகிறான் என்பதை யாரும் மறுக்க முடியாது. நான் அறிஞன் என்று 'நேரடியாகவோ மறைமுகமாகவோ' சொல்லிக் கொள்வதில் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்பமுண்டு. 'முட்டாள்' என்ற வார்த்தை ஒரு மனிதனின் உள்ளத்தை எத்தனை தூரம் புண்படுத்திவிடும் என்று நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. அறிவை உண்டாக்கிக் கொள்ளும் விஷயத்தில் ஒருவன் சிரமப்படுவதும் பின்னர் அதைத் தன் பெருமைக்குப் பயன்படுத்திக் கொள்வதும் மனித சுபாவங்கள். தாயக் கட்டம் விளையாடும்போது அதைப் பற்றி அறிந்தவன் சும்மா இருக்கமாட்டான். அவன் சும்மா இருந்

தாலும் அவன் நாவு சும்மா இருக்காது. எதையாவது ஒன்றைச் சொல்லிக்கொண்டுதான் இருக்கும். தான் அறிந்ததை வெளியில் பரப்பாவிட்டால் அவனுக்கு நிம்மதி பிறக்காது. இதற்கெல்லாம் காரணம் என்ன? அவன் தன் அறிவில் இன்பம் காண்கிறான். தன்னை அறிவாளி என்று சொல்லிக் கொள்வதில் அவன் பெருமையடைகிறான்.

அறிவு என்பது இறைவனின் வர்ணனையில் மிகவும் உயர்ந்தது. அது பரிபூரணத் தன்மையின் சின்னம். எனவே தான் நீ ஒரு மனிதனை அறிவாளி என்று சொல்லும்போது அவன் தன்னிடம் பரிபூரணத்தன்மை குடிகொண்டிருப்பதாக எண்ணுகிறான்; இன்பமடைகிறான்.

அறிவு பலதரப்படும். விவசாயத்தைப் பற்றியும் நெசவுத் தொழிலைப் பற்றியும் நீ அறிந்திருக்கும் அறிவு, அரசியலைப் பற்றியும் மக்களின் பரிபாலனத்தைப் பற்றியும் நீ அறிந்திருக்கும் அறிவைப் போன்றதல்ல! இவ்விரண்டிற்கு மிடையில் வேற்றுமையுண்டு. எனவே முந்தியதால் ஏற்படும் இன்பத்திற்கும் பிந்தியதால் ஏற்படும் இன்பத்திற்குமிடையில் வித்தியாசம் ஏற்படுகிறது. இதேபோன்று இலக்கண இலக்கியம் கற்றவர்கள் அனுபவிக்கும் இன்பத்திற்கும் இறைவனைப் பற்றியும் அவன் பேராற்றலைப் பற்றியும் அறிந்தவர்கள் அனுபவிக்கும் இன்பத்திற்கு மிடையில் வித்தியாசமுண்டு.

அறிவால் ஏற்படும் இன்பம் அந்த அறிவின் தரத்தைப் பொறுத்தது. அந்த அறிவு உயரும்போது அதனால் ஏற்படும் இன்பமும் உயரத்தான் செய்யும். மக்களின் அந்தரங்கத்தை அறிந்தவன் தன் ஞானம் குறித்து ஆனந்த மடைவான்; இன்புறுவான். தேசத் தலைவர்களின் மர்மங்களை அறிந்தவன் அதைவிட அதிகமாக இன்பமடைவான். அரசனின் மர்ம விவகாரங்களை அறிந்தவன் முந்திய எல்லோரையும் விட அதிகமாக ஆனந்தமடைவான்.

இதிலிருந்து நீ என்ன அறிகிறாய்? அறிவின் தரம் உயரும்போது அதனால் ஏற்படும் இன்பமும் இயற்கையாகவே உயர்ந்து விடுகிறது.

இறைவன் எல்லோரையும் விட எல்லா வகையிலும் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவன். அவனைப் பற்றிய அறிவு வேறு எதைப்பற்றிய அறிவையும் விடஉயர்ந்தது. எனவே அவனைப்பற்றியும் அவனுடைய ஒப்பில்லா ஆற்றல்களைப் பற்றியும் நாம் அறியும் அறிவு எல்லா இன்பங்களையும் விடச் சிறந்ததாகும்; இன்பங்களில் சிறந்தது இறையறிவால் ஏற்படும் இன்பமே!

இது விஷயத்தில் நீ சந்தேகப்படாவிட்டால் இறைவனின் மர்ம ஆற்றல்களையும், அவனுடைய செயலாற்றல்களையும் அறிவது எல்லா இன்பங்களையும் விடச் சிறந்தது என்பதில் உனக்குச் சந்தேகம் ஏற்படாது. எனவேதான் இறையறிவில் இன்பம் காண்பவர்கள் காமத்தை வெறுத்து விடுகிறார்கள்! கோபத்தால் ஏற்படும் இன்பத்தைத் தள்ளி விடுகிறார்கள்; வஞ்சம் தீர்ப்பதால் ஏற்படும் மகிழ்ச்சியை விரட்டி விடுகிறார்கள். ஏனெனில் எல்லா இன்பங்களையும் விடச் சிறந்தது அறிவின்பம். அறிவின்பங்களிலேயே சிறந்தது இறையறிவின்பம்.

இன்பங்கள் பலவகைப்படுகின்றன. ஒன்று மற்றொன்றுக்கு வித்தியாசப்படுகிறது. புணர்ச்சியின்பத்திற்கும் மற்ற இன்பத்திற்குமிடையில் வித்தியாசமுண்டு. ஒரு பொருளைக் கண்ணால் பார்ப்பதற்கும் அதைப் பற்றிக் காதால் கேட்பதற்குமிடையில் வேற்றுமையுண்டு.

இவற்றில் சிறந்தது என்று எதை ஒருவன் கருதுகிறானோ அதைத்தான் அவன் எடுத்துக் கொள்வான். விளையாட்டில் மோகம் கொண்டவன் தனக்காக உணவு காத்துக் கொண்டிருப்பதைக் கூடப் பொருட்படுத்தாது தாயக் கட்டம் விளையாடிக் கொ ஞடிருப்பதை நீ பார்த்திருப்பாய். காரணம்,

உணவின்பத்தைவிட விளையாட்டின்பத்தை அவன் உயர்ந்தது என்று என்னுகிறான். இப்படித்தான் இறைவனை அறிந்தவர்கள் மற்ற எல்லா இன்பங்களையும் துறந்து விட்டு இறையின்பத்தில் புகுந்து விடுகிறார்கள்.

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தில் ஏற்படுவதுண்டு. குழந்தைகளாயிருக்கும் போது விளையாட்டு எண்ணம் உதயமாகிறது. வாலிபத்தை அடையும்போது பெண் மோகமும் அலங்காரப் பிரியமும் தலை தூக்குகின்றன. இருபது வயதைக் கடந்த பிறகு அரசியலில் அக்கறை பிறக்கிறது. நாற்பது வயதை அணுகும்போது அறிவின் பக்கம் கவனம் திரும்புகிறது. இதுதான் கடைசிப்படி!

விளையாட்டை விட்டுவிட்டுப் பெண்களோடு சல்லாபம் புரிபவனைப் பார்த்துச் சிறுவர்கள் சிரிக்கிறார்கள். அரசியலை விட்டு விட்டு இறையின்பத்தில் ஈடுபட்டிருப்பவர்களைப் பார்த்து அரசியல்வாதிகள் கிண்டல் செய்கிறார்கள். இறைப் பாதையில் ஈடுபட்டிருக்கும் அறிஞர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? ''எங்களை நீங்கள் கிண்டல் செய்தால் அதே போன்று பின்னொரு சமயம் நாங்களும் உங்களைக் கிண்டல் செய்வோம். பின்னர் நீங்கள் உண்மையை அறிவீர்கள்'' (குர்ஆன்) என்று அவர்கள் விடையிறுக்கிறார்கள்.

உணர்ந்து பார்த்துச் செயலாற்ற முற்படு. நன்மையானவற்றை-சிறப்பானவற்றை எடுத்துச் செயலாற்று. உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு விடாதே!

✪ ✪ ✪

7. இறையன்பு வலுப்பட.....

மறுமையில் பெருமைக்குரியவர்கள் அதிகமான இறையன்பு கொண்டவர்களே! அத்தகையவர்களுக்குத்தான் அப்போது இறைவன் கண்ணியமளிப்பான். சிலர் அதிகமான அளவில் இறையன்பு கொண்டிருக்கலாம். வேறு சிலர் சாதாரண அளவில் இறைவன்மீது அன்பு பூண்டிருக்கலாம். எனினும் எந்த விசுவாசியும் இறைவன்மீது அறவே அன்பு கொள்ளாமல் இருக்க முடியாது! ஏனெனில், விசுவாசி எனப்படுபவன் இறைவனைப் பற்றி ஓரளவேனும் அறிந்திருப்பான்; இறைவனைப் பற்றி ஒரு சிறிதும் அறியாதிருப்பது சாத்தியமில்லை. எனவே அவனுடைய அறிவுக்குத் தக்கபடி இறைவன் மீது அவனுக்கு அன்பு உண்டாவது நிச்சயம். இந்த அன்பை வளரச் செய்ய வேண்டியது அவன் கடமை. இந்த அன்பு வளர்ந்து ஓர் எல்லையை அடையும்போது அதற்கு 'இறை காதல்' என்ற பெயர் கிடைக்கிறது.

இதுதான் இறையன்பு எனும் யாத்திரையின் கடைசி எல்லை. எனினும் இந்தப் படித்தரத்தைப் பெரும்பாலோர்

அடையவில்லை. அவர்களால் அடைய முடியவில்லை என்றும் கூறலாம். இத்தகைய படித்தரத்தை அடைந்தவர்கள் இன்று மிகவும் அபூர்வம்.

ஒப்பற்ற இந்தப் படித்தரத்தை இரண்டு வகைகளில் அடையலாம்.

1. உலகப் பற்றை அறுத்தெறிந்து இறையன்புக்கு உள்ளத்தில் தனியிடம் அளிக்க வேண்டும். இறைவனைத் தவிர்த்து வேறு யாரையும் எதையும் இவன் விரும்பக் கூடாது. மற்றவர்களுக்கு மற்ற பொருள்களும் உன் உள்ளத்தில் இடம்பெறும் போது இறைவனுக்கு அதில் கண்டிப்பாய் இடமிருக்காது. உள்ளத்தை ஒரு பாத்திரத்திற்கு ஒப்பிடலாம். அதிலுள்ள தண்ணீரை அப்புறப்படுத்தும் வரை அமுதை அதில் நிரப்ப முடியாது. தண்ணீரோடு பாலைக் கலந்தால் பாலின் தரம் குறைந்துவிடும். ஒரே சமயத்தில் ஒரே உள்ளத்தில் இறையன்பிற்கும் உலக அன்பிற்கும் இட மளிப்பது சாத்தியமில்லை. ஏனென்றால் இறைவன் ஒரு மனிதனுடைய உடலில் இரண்டு உள்ளங்களை வைத்துப் படைக்கவில்லை. மனிதனிடம் உள்ளது ஒரே உள்ளம். அது ஒரே ஒரு பொருளின் மீது தான் பூரண அன்பு செலுத்த முடியும்! இறைவனைத் தவிர்த்து வேறு எந்தப் பொருளுக்கேனும் உன் உள்ளத்தில் நீ இடம் கொடுத்தால் அது உன் அறியாமையே. இறைவனை முழு மனத்துடன் விரும்பு. அவனை நீ விரும் பும்போது உன் உள்ளத்தில் ஒரு மூலையில் மற்ற பொருள்கள் மீது அன்பு இருக்குமாயின் அந்த அளவிற்கு உன் இறையன்பு குறைந்து போய்விடும்.

இந்தக் கருத்தைத் திருமறையில் பல்வேறு இடங்களில் காணலாம். 'வணக்கத்திற்குரியவன் இறைவன் ஒருவனைத் தவிர்த்து வேறு யாருமில்லை' என்ற சொற்றொடருக்குச் சிலர் 'அன்பு செலுத்துவதற்குரியவன் இறைவன் ஒருவனை தவிர்த்து வேறு யாருமில்லை' என்று பொருள் கொள்கிறார்

கள். ஏனெனில் வணக்கம் என்பது விருப்பத்தைப் பொறுத்த விஷயம். விருப்பமில்லாமல் எந்த மனிதனும் வணக்கத்தில் ஈடுபடமாட்டான். வணக்கத்திற்குரியவன் என்று ஒருவனி ருந்தால் அவன் அன்பு செலுத்துவதற்கும் உரியவனாகவே இருக்க வேண்டும். வணக்கத்திற்குரியவன் இறைவன், எனவே அன்பு செலுத்துவதற்குரியவனும் அவனே!

மனோ இச்சையை விரும்பி அதற்கு வழிபடுவது இதற்கு எதிர் வழியாகும்; இது குறித்து இறைவன் ''தன் இச்சையையே தன் இறைவனாக ஆக்கிக் கொண்டவனை நீர் அறிவீரா?'' என்று கேட்கிறான். ஒருவன் தன் மனோ இச்சையை விரும்பி அதன்படி நடக்கும்போது அதற்கு அவன் அடிமைப்படு கிறான். அப்போது இச்சை இறைவனாகவும் அதைப் பின்பற்றுபவன் அடிமையாகவும் மாறவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஏனென்றால் மனிதன் தன் நாயனைத் தவிர்த்து வேறு யாருக்கும் அடிபணிய மாட்டான்; சிரம் குனிய மாட்டான்!

''உலகில் வழங்கப்பட்டவற்றிலேயே மிகவும் கொடியது மனோஇச்சை!'' என்று அண்ணல் நபியவர்கள் கூறி யுள்ளார்கள்.

''ஒருவன் 'வணக்கத்திற்குரியவன் இறைவன் ஒருவனை தவிர்த்து வேறு யாருமில்லை,' என்று கூறி அந்த இறைவ னுக்குத் தன் உள்ளத்தில் முழு இடம் அளிப்பானாயின் சுவன வாழ்க்கைக்கு அருகதையுள்ளவனாகிறான்'' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இப்படி ஒருவன் தன் உள்ளத்தையே இறைவனுக்கென்று ஒதுக்கிவிடும்போது அவன் வாழ்க்கையில் வேறு எந்த அன்பிற்கும் இடமிருக்காது. இறையன்பு ஒன்றுதான் அவன் குறிக்கோள். அந்த இறைவனை அடையும் நன்னாளைப் பேராவலுடன் எதிர்பார்ப்பான். அவனுக்கு ''இவ்வுலகம்

சிறைக்கூடமாகக் காட்சியளிக்கும். இறை விசிவாசிகளுக்கு இம்மாநிலம் சிறையைப் போன்றது'' என்ற பொன் மொழியை நீ கேட்டிருக்கலாம். ஏனென்றால் இவ்வுலகத்தில் அவனால் தன் நாயனை-அன்பனைக் காணமுடியாது. தன் மரணத்தை அவன் தன் சிறைத் தண்டனையின் விடுதலை என்று கருதுவான். அன்பனையும் அன்பு செலுத்துபவனையும் ஒன்று சேர்ப்பது மரணமல்லவா? இந்த விடுதலையால் அவனுக்கு ஏற்படும் இன்பம் மட்டிலடங்காதது. நிரந்தர இன்பத்தின் எல்லையில் அவன் அடியெடுத்து வைத்து விடுவான்!

உலகத்தின்மீது நீ வைத்திருக்கும் அன்பு இந்த இறையன்புக்குக் களங்கம் விளைவித்து விடக்கூடும். உலகத்தின் மீது உனக்கு அன்பு ஏற்படும் போது இறைவன் மீதுள்ள உன் அன்பு குறைய ஆரம்பித்துவிடும். உற்றார், உறவினர், நண்பர்கள், மனைவி, மக்கள் ஆகியோர் மீது நீ அன்பு செலுத்துவதும் - பதவி, பொருள், தோட்டங்கள், ஆடுமாடுகள் முதலியவற்றை விரும்பி வரவேற்பதும் இப்படித்தான். பறவை இனங்களில் இனிய நாதம் கேட்டு இன்பமடைபவன்- தென்றலை அனுபவித்து இன்பம் காண்பவன் உலகத்தை விரும்புகிறான். அவன் உள்ளம் உலகின்பால் திரும்புகிறது.

இவற்றிற்கு ஒருவன் ஓரளவேனும் தன் உள்ளத்தில் இடமளிக்கும்போது அந்த அளவிற்கு இறையன்பு குறைந்து போய்விடும். உலகை முற்றும் துறந்தவர்கள் இறைவனை முழுக்க முழுக்க விரும்புவார்கள். அவர்கள் உள்ளத்தில் வேறு எதற்கும் இடமிருக்காது. உலகை முற்றும் விரும்பியவர்கள் இறைவனைச் சிறிதளவும் விரும்ப மாட்டார்கள். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவை; ஒன்று இருக்குமிடத்தில் மற்றொன்று இருக்காது. இவற்றில் ஒன்று ஞானத்தை வளர்ப்பது; மற்றொன்று ஞானத்தை அழிப்பது.

இதைப் பற்றிய உண்மையை நீ அறியாதிருக்கலாம். எனினும் அகத் தெளிவுடையவர்கள் இதை மிகத் தெளிவாக அறிந்து கொண்டு விட்டார்கள்.

''உலகத்தின் ஆசையை உள்ளத்திலிருந்து எப்படி அகற்ற முடியும்? அதற்குரிய மார்க்கமென்ன?'' என்று நீ கேட்கலாம். இதோ எழுதுகிறேன். பொறுமையை மேற்கொண்டு துறவறத்தைக் கடைப்பிடித்து நம் முன்னோர்கள் நடந்த அதே பாதையில் நீயும் செல்லவேண்டும்; அந்த மகான்களின் செயல்முறைகளை நீ பின்பற்றும்போது அவர்கள் அடைந்த வெற்றிகளில் சிலவற்றையேனும் அடையும் பேறு உனக்குக் கிடைக்கும். இந்த வழியில் பல எல்லைக்கோடுகள் இருக்கின்றன. பாவமன்னிப்பு, பொறுமை, இறையச்சம், துறவறம்....இப்படிப் பல்வேறு எல்லைகளைக் கடந்து இறையன்பு என்ற மாளிகையில் நீ பிரவேசிக்க வேண்டும்!

நீ முதலில் நம்பிக்கை கொள்ள வேண்டும் இறைவனைப் பற்றியும் மறுமையைப் பற்றியும் உறுதி பூண வேண்டும். இந்த உறுதியிலிருந்து இறையச்சம் தானாகவே உற்பத்தியாகி விடும். அதிலிருந்து பாவமன்னிப்பும், பொறுமைக் குணமும் பிறக்கின்றன. இந்நிலையிலிருந்து உலகையும் அதிலுள்ள யாவற்றையும் துச்சமாக மதிக்கும் துறவற மனப்பான்மை உதயமாகிறது. இத்தகைய நிலையை அடைந்தவனுக்குப் பொருளைப் பற்றியோ பதவியைப் பற்றியோ கவலை இருக்காது! மனைவியைப் பற்றியோ மக்களைப் பற்றியோ அக்கறை இருக்காது. இந்த நிலையை அவன் அடையும்போது அவன் உள்ளம் பரிசுத்தமாகிவிடும். இதன் பிறகுதான் அவன் பல்வேறு இன்பங்களை அனுபவிக்க முற்படுவான். இதைத்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ''பரிசுத்தம் ஈமானில் பாதி'' என்று கூறியிருக்கிறார்கள். இதைப் பற்றி 'பரிசுத்தம்' என்ற நூலில் விவரித்திருக்கிறேன். இறையன்பை அதிகப்படுத்துவதற்குரிய முதல் மார்க்கம் இது!

2. உலக இன்பங்கள் பற்றிய சிந்தனைகளையும் தவறான எண்ணங்களையும் உள்ளத்திலிருந்து வெளியேற்ற வேண்டும்; உள்ளத்தை தூய்மைப்படுத்த வேண்டும். இது இறையன்பை அதிகப்படுத்துவதற்குரிய இரண்டாம் மார்க்கம். உள்ளம் உலகியல் இன்பங்கள் பற்றிய சிந்தனைகளிலிருந்து பரிசுத்தமாகும்போது அதில் இறையன்பு என்ற மரம் வளர ஆரம்பிக்கும். இறைவனைப் பற்றிய உன் அறிவுதான் இந்த மரத்தின் வித்து. ''அது மண்ணிலே வேர் பாய்ச்சி நின்றாலும் அதன் கிளைகள் விண்ணோடு உறவாடுகின்றன'' என்று இறைவன் உவமானம் கூறுவதைக் கவனி. உள்ளம் சுத்தமாக இருக்கும்போது இந்த வித்து எக்காரணம் கொண்டும் வளரத் தவறாது. மனிதன் அழகைப் பார்த்ததும் அவன் உள்ளத்தில் அன்புமரம் வளர்வது போல் அவன் இறைவனைப் பற்றி அறிந்ததும் இறையன்பு மரம் வளர ஆரம்பித்துவிடும். ஒரு மனிதன் உலக இச்சையைத் துறந்துவிட்டால் மட்டும் பரிபூரண இறையன்பு ஏற்பட்டு விடும் என்று சொல்ல முடியாது! நிரந்தர சிந்தனையாலும் ஆராய்ச்சியாலுமே இறையன்பு பூரணத்துவம் அடைகிறது.

இந்தப் படித்தரத்தை அடைந்தவர்களில் பலமிக்கவர்கள், பலவீனர்கள் என்று இரு பிரிவினர் இருக்கின்றனர்.

பலமிக்கவர்கள் முதலில் இறைவனை அறிவார்கள். இது அவர்களின் முதல் வேலை. அடுத்தபடியாக அந்த இறைவனின் உதவியாலேயே மற்ற பொருள்களை அறிவார்கள். உலகிலுள்ள அறிவுகளையெல்லாம் அவர்கள் எளிதில் கிரகித்துக் கொள்வார்கள். அதற்காக அவர்கள் எந்த ஆசானையும் தேடியலைய வேண்டியதில்லை. இறைவன் ஒருவனே அவர்களுக்கும்போதும்! அவன்தான் பேரறிஞனாயிற்றே! அவனுக்குத் தெரியாதது ஒன்றுமில்லையல்லவா? இத்தகையவர்களைப் பற்றித்தான் இறைவன் 'உனக்கு உன் நாயன் போதுமானவனல்லவா? அவன் எல்லாவற்றையும் கண்காணிக்கிறான்' என்று கூறுகிறான். 'இறைவனைத் தவிர்த்து வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று இறைவனே சான்று பகர்ந்து விட்டான்!' என்று திருமறை கூறுகிறது.

இதற்குப் பெரியோரின் உரையாடலையும் ஆதாரமாகக் கொள்ளலாம்: 'எதன் உதவியால் இறைவனை நீர் அறிந்தீர்?' என்று ஒருவர் கேட்டார்.

மற்றவர் உடனே பதிலிறுத்தார். ''இறைவனை அவனைக் கொண்டே நான் அறிந்தேன்! அவன் இல்லையாயின் அவனையும் மற்றவற்றையும் என்னால் அறிந்திருக்க முடியாது!''

இது முதற் பிரிவனரைப் பற்றிய விஷயம். கவனித்துக் கொள்.

இரண்டாம் பிரிவினர் பலவீனமானவர்கள். இவர்கள் முதற் பிரிவினருக்கு நேர் மாற்றமானவர்கள். இவர்கள் முதலில் இறைவனை அறியமாட்டார்கள்; அவர்களால் அப்படி அறியவும் முடியாது. இவர்கள் முதலில் உலகில் நடைபெறும் காரியங்களையும் கண்முன்னே தோன்றும் காட்சிகளையும் ஊன்றிப் பார்ப்பார்கள்; உண்மையை அறிவார்கள். இந்த அறிவின் உதவியால் இவர்கள் இறைவனை அறிவார்கள்.

''எங்கள் ஆதாரங்களை விண்ணகத்திலே மட்டுமல்ல, உங்களிலேயே அமைத்து வைத்திருக்கிறோம். அவை உங்களுக்கு உண்மையை எடுத்துரைக்கும்'' என்று இறைவன் கூறுகிறான்.

''விண்ணக ஆட்சியைப் பற்றியும் மண்ணக ஆட்சியைப் பற்றியும் அவர்கள் சிந்தித்துணர்வதில்லையா?'' என்று திருமறை அறைகூவுகிறது.

''நபியே! அவர்களிடம் கூறும்; விண், மண்ணிலுள்ளவற்றை உற்று நோக்கி உண்மையை அறியுங்கள்!'' என்பதும் திருமறை வசனமே.

பிறிதோரிடத்தில் திருமறை வர்ணிக்கிறது, கவனித்துக் கேள். ''அவன் விண்ணைத் தட்டுத் தட்டாகப் படைத்தான். இறைவனின் படைப்பில் உம்மால் குறையைக் காண முடியாது. உம் பார்வையைத் திருப்பும். எங்கேயேனும் குறைபாடு காணப்படுகிறதா என்று பாரும். மறுபடியும் உம் பார்வையை அதன்பால் திருப்பும். உம்மால் குறைபாடு காணவே முடியாது. உம் பார்வை தோல்வியோடு உம்மிடமே திரும்பி வந்துவிடும்!''

இது பெரும்பாலோர் பின்பற்றும் முறை. இந்த முறையால் இறையன்பை அதிகப்படுத்தலாம். இந்த முறையைப் பற்றிதான் குர்ஆன் பல்வேறு இடங்களில் விளக்கம் தருகிறது. அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் நல்லிடம் தரும் திருமறை, உலகில் காணப்படும் ஒவ்வொன்றைப் பற்றியும் சிந்தித்து இறைவனை அறியுமாறு தூண்டுவது நியாயம் தானே. திருமறை ஓர் அறிவு நூல். அது அறிவை வளர்க்கும் சிந்தனையை வலியுறுத்துகிறது.

இறைவனின் படைப்புகளில் இப்பூவுலகம் மிகவும் சிறியது; உலகைவிட எத்தனையோ மடங்கு பெரிதான பல படைப்புகள் இருக்கின்றன. சூரியனும் இறைவனின் படைப்பு தான். அது பூமியைவிட எந்த வகையிலும் சிறியதல்ல. சூரியன் பூமியைவிட ஏறக்குறைய 160 மடங்கு பெரிய தாகும்.

பூமியைப் பற்றி நீ ஆராய்ந்த பிறகு உன் ஆராய்ச்சியை சூரியனின்பால் திருப்பு. சூரியன் பூமியைவிடப் பெரியதா யிருக்கலாம். ஆனால் அது எந்த வகையிலும் விண்ணகத்தை விடப் பெரியதல்ல; சூரியனையே தன்னுள்ளடக்கிக் கொண்டி ருக்கும் விண்ணகம் சூரியனைவிடப் பலநூறு - பல ஆயிரம் மடங்கு பெரியது.

இப்படி ஒவ்வொன்றாக உன் ஆராய்ச்சியை செலுத்திக் கொண்டு போவாயானால் கடைசியில் எல்லாவற்றையும் விட இறைவன் பெரியவன் என்று உணர்ந்து கொண்டு விடுவாய்.

இதைப்பற்றி அதிகமாக விவரிப்பதை நான் விரும்பவில்லை. இது விரிவான பகுதி. ஏனென்றால் ஆராய்ச்சியையும் சிந் தனையையும் ஒரு வரம்பிற்குள் கட்டுப்படுத்த முடியாது. இவை மண்ணகத்தை மட்டுமல்ல விண்ணகத்தை அளந்து பார்க்கும் தனியாற்றல் பொருந்தியவை. உலகில் சிந்தனைக்கு எத்தனையோ வழிகள் உள்ளன. படைப்புகளில் உயிரினங்கள் தாம் கொஞ்சமா? உயிரினங்களில் விலங்கினங்கள் தாம் கொஞ்சமா? இவற்றை எல்லாம் விவரித்து முடிப்பது சாத்திய மில்லை.

தெரிந்தவற்றை வைத்துக் கொண்டு முன்னேறு. எப்படி யாவது இறையன்பை வலுவேற்றிக் கொள்ள முயற்சி செய்!

✪ ✪ ✪

8. மக்களின் நிலை

முஃமின்கள் எல்லோரும் இறைவனை விரும்பு கிறார்கள். அவன்மீது அன்பு செலுத்துகிறார்கள். என்றாலும் எல்லோருடைய அன்பும் ஒரே மாதிரியாய் இருப்பதில்லை. சிலர் இறைவனை முழுமனதுடன் விரும்புவார்கள். வேறுசிலர் ஏதோ கடமைக்காக விரும்புவார்கள். அவர்கள் இறைவனைப் பற்றி அறிந்திருக்கும் அறிவைப் பொறுத்துத்தான் இத்தகைய வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

மக்களில் பெரும்பாலோர் இறைவனை நன்கு அறிய வில்லை. அதற்குரிய சந்தர்ப்பமும் அவர்களுக்குக் கிடைக்க வில்லை. சந்தர்ப்பத்தை உண்டாக்கவும் அவர்கள் முனைய வில்லை:

இவர்கள் இறைவனைப் பற்றி மிகவும் குறைவாகவே அறிந்திருப்பார்கள். இறைவனின் பெயர்கள் சிலவற்றையும் அவன் வர்ணனைகள் சிலவற்றையும் இவர்கள் அறிந்தி ருப்பார்கள். அதுவும் மக்களின் உரையாடலுக்கிடையில்தான் அவற்றை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். அவற்றை மனனம் செய்து கொண்டு செயலாற்றுவார்கள்.

சில சமயங்களில் இந்த சாதாரண அறிவின் காரணமாகக் கற்பனைகள் உதயமாகின்றன. வீணான-தவறான எண்ணங் கள் தோன்றுகின்றன: இறைவனுக்குப் பொருந்தாத முரண் பட்ட கருத்துகள் உற்பத்தியாகின்றன. உண்மையான கருத்துகள் அநேகமாக வெளிப்படுவதில்லை! எனினும் தவறான எண்ணங்களுக்கு இடம் கொடாமல் சிலர் தப்பித்துக் கொள்வார்கள். இப்படித் தப்பித்துக் கொண்டவர்கள் இறை வனைப் பற்றிய தர்க்கங்களில் ஈடுபடமாட்டார்கள். வேறு சிலர் தர்க்கங்களில் ஈடுபட்டுத் தங்களிடமிருந்த கொஞ்ச நஞ்ச அறிவையும் இழந்து விடுவார்கள்.

ஆக மக்கள் மூன்று பிரிவுகளில் கட்டுப்பட்டு விடு கின்றனர்.

1. தாங்கள் அறிந்தவற்றை நம்பி வழிபடுபவர்கள், இறை வனைப் பற்றிய வாதங்களில் ஈடுபடாதவர் கள்-இவர்கள் ஒருவகையில் பாக்கியசாலிகளே.
2. இறைவனைப்பற்றிய வாதங்களில் ஈடுபட்டுத்தப்பெண்ணம் கொண்டவர்கள்-இவர்கள் வழி கெட்ட வர்கள்.
3. அந்தரங்கத்தை அறிந்தவர்கள்-இவர்கள் இறையண்மையை அனுபவிக்கும் பேறுபெற்றவர்கள்.

இந்த மூவரைப் பற்றியும் இறைவன் பல்வேறு இடங்களில் கூறியுள்ளான்.

என்ன கேட்கிறாய்? உனக்கு இது புரியவில்லையா? அப்படியானால் ஓர் உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன். நான்கு கவனித்துப் படி.

உதாரணமாக, நாம் இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்களை விரும்புகிறோம். நம்மைப் போன்று மற்றவர்களும் அவர்களை விரும்புகிறார்கள். இப்படி விரும்புபவர்களில் அறிஞர்களும் இருக்கிறார்கள்; பாமரர்களும் இருக்கிறார்கள். இவ்விருவருக் கிடையில் அன்பின் தராதரத்தில் வேற்றுமையுண்டு.

ஒரு பாமரன் இமாமவர்களை விரும்பும் விதமும் ஓர் அறிஞன் அவர்களை விரும்பும் விதமும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. பாமரன் இவர்களைப் பற்றிப் பொதுவாக எண்ணுவான்; அறிவான்; பெருந்தகை, அறிஞன் என்று நம்புவான். ஆனால் அவனுக்கு இமாமவர்களின் அறிவின் தரம் தெரியாது. அவர்கள் எத்தகைய ஆற்றல் பெற்றிருந்தார்கள் என்றும் அவனுக்குத் தெரியாது. இது பாமரனின் அறிவு. இந்த அறிவுக்குத் தகுந்தபடிதான் இமாமவர்களை அவனால் விரும்ப முடியும்.

மார்க்கச் சட்டங்களை நன்கு அறிந்த ஓர் அறிஞன் இமாமவர்களை வேறுகோணத்திலிருந்து பார்ப்பான். அவர்களின் அறிவுத் திறனையும் ஆத்மீக ஆற்றலையும் கண்டு மகிழும் ஆற்றல் அவனிடமுண்டு. எனவே அறிஞனுடைய அறிவு பலமானது, இதனால் அவனுடைய அன்பும் வலுவானதே!

அறிஞன் ஒருவனின் நூலைப் படித்து நீ அனுபவிக்கும் போது அந்த அறிஞனை விரும்புகிறாய். அதைவிடச் சிறந்த நூலை நீ பார்க்கும் போது அதன் ஆசிரியரை முன்னவனை விட அதிகமாக விரும்புகிறாய்.

இவ்விருவருக்கும் இடைப்பட்டு நின்றவனும் உண்டு. அவன் இமாமவர்களை நன்கு அறிந்திருக்கமாட்டான். அவர்களைப் பற்றிப் பொதுமக்கள் கூறும் உண்மைகளையும் அவன் நம்பமாட்டான். இதே போன்றுதான் இறையன்பும். ஆனால் இறையன்பு என்பது பெரியதொரு கடல்; கரை காண முடியாத சமுத்திரம்.

மனிதனின் அன்பிற்கும் இறைவனின் அன்பிற்கு மிடையில் வித்தியாசமுண்டு என்று ஆரம்பத்திலேயே கூறினேன். அதை இப்போதும் கூறுகிறேன். இறைவன் உனக்கு எத்தனையோ உதவிகளைச் செய்திருக்கிறான். எனினும் அவனை உன் உதவியாளன் என்ற முறையில் விரும்பாதே; உன் நாயகன் என்ற முறையில் விரும்பு.

ஏனெனில் உதவியை எண்ணி அன்பு கொள்பவர்களால் இன்னலின்போது பொறுமையை மேற்கொள்ள முடியாது. அப்போது அவர்கள் வல்லவனைத் திட்டினாலும் திட்டலாம்! அவ்வளவு மோசமான நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டு விடும்! இறைவனை நாயன் என்ற முறையில் விரும்புபவர்கள் இப்படியெல்லாம் செய்யமாட்டார்கள். எத்தகைய இன்னலுக்கும் அவர்கள் அஞ்சமாட்டார்கள்.

✪ ✪ ✪

9. இறைவனை அறிய....

உலகில் எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன அவை எல்லாவற்றையும்விட இறைவன் பகிரங்கமானவன். எதை மறுத்தாலும் எதை மறுக்காவிட்டாலும் இறைவனை மட்டும் கண்டிப்பாய் எவராலும் மறுக்க முடியாது. காரணம், அவன் எல்லாவற்றையும்விட மிகவும் பகிரங்கமானவன். எனவே ஒருவன் எந்தப் பொருளை விடவும் முதன்மையாக இறை வனைத்தான் அறிய வேண்டும். இறைவன் மக்களின் உள்ளங்களில் அதி விரைவில் இடம் பற்றுபவன். அவன் உள்ளமையை எந்த உள்ளமும் ஒப்புக் கொள்ளத் தயங்காது.

ஆனால் இவை அனைத்தும் நேர் எதிராக இருப்பதாக உனக்குத் தோன்றுகிறது. இதற்குக் காரணமில்லாமலும் போய்விடவில்லை.

ஒரு பொருள் உனக்குப் புலப்படவில்லை என்றால் அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, அந்தப் பொருள் மிகவும் மறைவாக இருக்கவேண்டும். இதற்கு உதாரணம் வேண்டியதில்லை. மற்றொன்று, அந்தப் பொருள் மிகமிகத்

தெளிவானதாக இருக்க வேண்டும். வெளவாலைப் பற்றி உனக்குத் தெரியுமல்லவா? பகிரங்கமான பகலை அது பார்ப்பதேயில்லை. அப்போதெல்லாம் அதற்குக் கண்கள் பயன்படா. காரணம், சூரியனின் ஒளி அதன் பார்வையைச் சூறையாடிவிடுகிறது. அந்த அளவுக்கு அதன் பார்வை பலவீனமானது. எனவே பகிரங்கமான-மிகவும் பகிரங்கமான பகலை அதனால் பார்க்க முடியவில்லை.

இதேபோன்றுதான் இருக்கிறது நம் நிலைமை- நம்முடைய அறிவு பலவீனமானது. இறைவனின் பேரொளியை அது காண்பதில்லை. காரணம், இறைவனின் ஒளி மிக மிகத் தெளிவானது. வெளவாலின் பார்வையைப் போக்கிய சூரிய ஒளியைப் போல் நம்முடைய அறிவொளியை இறையொளி போக்கி விடுகிறது.

அந்த இறையொளி எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நம்முடனே இருக்கிறது. இதனால்தான் அந்த நம்மால் பார்த்துணர முடியவில்லை.

''ஒவ்வொரு பொருளும் அதற்குரிய எதிர்பொருளால்தான் உணரப்படுகிறது'' என்று ஒரு தத்துவக் கருத்து உண்டு. இது உண்மை நிறைந்தது. ஆனால் இறைவன் எதிர்ப் பொருளற்றவன். எனவே அவனை இந்த முறையில் அறிந்து கொள்வதும் கஷ்டமாகத்தானிருக்கிறது.

சூரியனை எடுத்துக் கொள்வோம். அது காலையில் உதயமாகி மாலையில் மறைவதை நாம் பார்த்திருக்கிறோம். பகலை பார்த்த நாம் இரவு நெருங்கும் போது இரவு, பகல் ஆகியவற்றின் வேற்றுமையை உணர்ந்து கொள்கிறோம். இரவின் இருளைக் கொண்டு பகலின் ஒளியை உணர்கிறோம். சூரியன், உதயமும் மறைவும் இல்லாமல் எப்போதும் ஒரே நிலையில் இருக்குமாயின் நம்மால் இந்த ஒளியின் பெருமையை உணர முடியாது.

இதே போன்றதுதான் இறையொளியும். அது மிக மிகத் தெளிவானது. சூரிய ஒளியைவிடத் தெளிவானது. ஆனால் பலவீனப்பட்ட நம் உள்ளத்தால் அதை உணர முடியவில்லை. அவ்வளவுதான்; உலகிலுள்ள யாவற்றையும்விட ஒளி தெளிவானது; ஏனெனில் ஒளியின் உதவியால்தான் நாம் எதையும் பார்க்கிறோம்.

இறைவன் மிகத் தெளிவானவன்! உலகிலுள்ள ஒவ்வொன்றையும் அவன் ஒளியால்தான் நாம் பார்த்தறி கிறோம்.உலகில் அங்கங்கள் ஒவ்வொன்றிலும் அவன் ஒளி பரவி நிற்கிறது. இந்த ஒளி என்றுமே நீங்குவதில்லை. இந்த ஒளிக்கு எதிர்ப் பொருள் என்று ஒன்று இருந்தால் அந்த ஒளியை நம்மால் மிக எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். ஆனால் இறைவன் ஒருவனைத் தவிர்த்து வேறு இறைவன் யாருமில்லையே! உலகின் படைப்புகளில் சில இறை வனாலும் வேறு சில ஏதோ ஒரு சக்தியாலும் உண்டாக்கப் பட்டிருந்தால், அந்த சக்தியின் உதவியால் இறைவனை அறிந்து கொள்ள முடியும்-இரவின் இருளால் பகலின் ஒளியை அறிவதுபோல்! ஆனால் அப்படியுமில்லையே! அவன் தனி மன்னன். எல்லாவற்றையும் அவனே படைத்தான். அவனு டைய செயலுக்குத் துணை புரியும் ஆற்றல் வேறு யாருக்குத் தான் உண்டு? அவனுக்கு எதிர்ச் சக்தி என்று ஒன்று இருந் தால், உலகம் இந்த நிலையிலா இருக்கும்? ஒவ்வொன்றும் சீர்குலைந்து போய்விடும்!

இப்போது புரிந்து கொண்டாயா, பெரும்பாலோர் ஏன் இறைவனை அறியவில்லை என்று?

ஆனால் இது பொதுவான விஷயம். பலமிக்க உள்ளம் பெற்றவர்களின் நிலைமை வேறுவிதமானது. இறைவனைத் தவிர்த்து வேறு எதையும் பார்க்கமாட்டார்கள். உள்ளமை என்றால் இறைவன் ஒருவனுக்குத்தான் பொருந்தும் என்று

வாதிப்பார்கள். அவர்கள் பார்க்கும் ஒவ்வொரு பொருளிலும் அவர்களுக்கு இறைவன் தோற்றமளிப்பான். பொருளைப் பார்த்து ரசிப்பதற்குப் பதிலாக அவர்கள், அந்தப் பொருளைப் படைத்த இறைவனைப் பார்த்து மகிழ்வார்கள். வானம், பூமி, மிருகம், மரம் யாவற்றையும் பார்ப்பார்கள். ஆனால் மறுகணமே அவர்கள் 'இவை அனைத்தும் இறைவனின் படைப்புக்களே!' என்று எண்ணிச் சிந்திக்க ஆரம்பித்து விடுவார்கள்.

கடைசியாக ஒரு விஷயம் சொல்கிறேன். அதையும் நினைவில் வைத்துக் கொள். தன் கழுதையின் மீது அமர்ந்து கொண்டே ஒருவன் ''எங்கே என் கழுதை?'' என்று அலறினானாம். இறைவனைத் தேடும் மக்களுக்கு இந்த உதாரணத்தைத்தான் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

10. மக்களின் மீது மன்னனின் அன்பு

இறைவன் மீது அன்பு செலுத்த வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன்; குறிப்பிடுகிறேன். இறைவனும் மக்களின்மீது அன்பு செலுத்தத்தான் செய்கிறான். அவன் மக்களின் மீது மங்காத அன்பு உடையவன். இதற்குத் திருமறை வசனங்கள் பலவற்றை ஆதாரமாகக் கொடுக்கலாம். திருமறையில் பல்வேறு இடங்களில் இறைவன் மக்கள்மீது வைத்திருக்கும் அன்பைப்பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

இறைவன் கூறுகிறான்: ''அவர்களை இறைவன் விரும்புகிறான்; இறைவனை அவர்கள் விரும்புகிறார்கள்;''

மீண்டும் கூறுகிறான்: ''இறைவனின் பாதையில் அணி வகுத்து நின்று போர்புரிந்தவர்களை அவன் விரும்புகிறான்.''

''பாவ மன்னிப்புக் கோருபவர்களையும் பரிசுத்தமானவர் களையும் அல்லாஹ் விரும்புகிறான்!'' என்று திருமறை கூறுகிறது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''இறைவனின் அன்பு ஒரு மனிதனின்மீது ஏற்படும்போது அவனுடைய

குற்றங்கள் வலுவிழந்து விடுகின்றன. அவற்றின் தீய தன்மைகள் மாறிப் போய்விடுகின்றன. குற்றத்திற்குப் பாவமன்னிப்புப் பெற்றவன் குற்றமே செய்யாத வனைப் போல மாறி விடுகிறான்.''

இறைவனின் அன்பு ஒருவன் மீது ஏற்படும்போது அவன் குற்றங்களை எல்லாம் இறைவன் மன்னித்து விடுவான் என்பதுதான் இதன் பொருள்.

திருமறை கூறுகிறது: ''நபியே! நீர் அவர்களிடம் கூறிவிடும். நீங்கள் இறைவனை விரும்புபவர்களாயிருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். உங்களை இறைவன் விரும்புவான். உங்கள் குற்றங்களை மன்னித்தருள்வான்.''

திருநபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''இறைவன் இவ்வுலக இன்பங்களைத் தன் அன்பர்களுக்கும் அன்பற்றவர்களுக்கும் அருள்கிறான். ஆனால் சுவனம் எனும் மறு நம்பிக்கையை அவன் தன் அன்பர்களுக்கு மட்டுமே அளிக்கிறான்!''

மீண்டும் கூறினான்: ''இறைவனுக்கு ஒருவன் பணிந்து நடந்தால் அவனை இறைவன் உயர்த்தி விடுவான். பெருமையடித்தவனை இறைவன் சிறுமைப்படச் செய்து விடுவான். இறை தியானத்திலே ஒருவன் அதிக நேரத்தைச் செலவிடும் போது அவனை இறைவன் விரும்புகிறான்!''

இறைவன் கூறுகிறான்: ''என் அடியான் தன்னை வணக்கங்களால் என்னை அணுகி வந்து கொண்டேயிருக் கிறான். நான் அவனை விரும்பும் வரை அவன் என் அன்பை நாடி நெருங்குகிறான். அவனை நான் விரும்ப ஆரம் பித்துவிட்டால் அவனுடைய காதால் நான் கேட்பேன். அவன் கண்களால் நான் பார்ப்பேன்.''

ஆக இறைவன் தன் அடியானை விரும்புவது குறித்து எண்ணிறந்த ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் இச்சிறிய நூலில் விவரித்துவிட முடியாது. மக்களின் அன்பிற்கும்

இறைவனின் அன்பிற்குமிடையில் வித்தியாசமுண்டு. சுயநலமற்ற அன்பை மனிதனிடம் எதிர்பார்க்கவே முடியாது என்று வாதிக்கலாம். ஆனால் இது இறைவனின் விஷயத்தில் கண்டிப்பாய்ப் பொருந்தாது. இறைவன் தேவையற்றவன். அவன் எவரிடமும் எத்தகைய நன்மையையும் எதிர்பார்க்கவில்லை. சுயநலத்தை அவன் விஷயத்தில் கற்பனைகூடச் செய்ய முடியாது. இப்படியிருந்தும் அவன் எப்போதும் போல் அன்பனாகத்தான் இருக்கிறான். மக்களின்மீது அவனுக்கிருக்கும் அன்பில் சிறிதும் மாற்றம் ஏற்படவில்லை. அவன் அன்பு செலுத்தும் மன்னனல்லவா?

✪ ✪ ✪

11. நற்குறிகள் சில

''நான் இறைவனை விரும்புகிறேன்'' என்று கூறிக் கொள்வதில் அநேகர் பெருமை கொள்கிறார்கள். தங்களிடம் இறையன்பு இருப்பதாக அவர்கள் வாதிக்கிறார்கள். எத்தனை சாதாரணமாகக் கூறி விடுகிறார்கள்! இது எத்தனை பெரிய விஷயம் என்று அவர்கள் கொஞ்சமும் எண்ணிப் பார்க்க வில்லையே! மனிதனின் மனம் விசித்தரமானது. அதன் ஆழத்தை யாராலும் அளக்க முடியாது. அது எதை எதையோ வாதிக்கும்; தன்னிடம் இல்லாத ஆற்றலை அது இருப்பதாக எடுத்துரைக்கும்; ஆனால், இவற்றையெல்லாம் உடனே நம்பி விடக் கூடாது.

இறையன்பு ஒரு மனிதனின் உள்ளத்தில் இடம் பெற்றிருக்குமாயின் அவன் அங்கங்களின் வாயிலாகவே பல அடையாளங்கள் அவசியம் வெளிப்படும். அவை வெளிப் படாவிடில் அந்த மனிதனின் உள்ளத்தில் கண்டிப்பாய் இறை அன்பு இடம் பெற்றிருக்க முடியாது. இதை நீ முதலில் அறிந்து

கொள். இறையன்பு என்பது ஒரு மரம். அதன் கனி உள்ளத்திலும் அங்கங்களிலும் செயல்களிலும் பழுக்கும். புகையைப் பார்த்து அதன் உதவியால் நாம் நெருப்பைத் தீர்மானிக்கிறோம். அதேபோன்று இந்தக் கனியைப் பார்த்து இறையன்பு என்ற மரத்தை உணர்ந்து கொள்ளலாம்.

1. இறையன்புடையவர்கள் இறை சந்திப்பை பெரிதும் விரும்புவார்கள். இறைவனை விரும்பும் ஓர் உள்ளம் எக்காரணம் கொண்டும் அவன் சந்திப்பை வெறுக்க முடியாது. இறைவனின் சந்திப்பை மனிதன் எவ்வாறு அடைய முடியும்? அதற்குரிய ஒரே வழி இம்மையிலிருந்து மறுமைக்குப் பிரயாணப்படுவதுதான்! இவ்விரு உள்ளமைகளுக்கும் இடையில் பாலத்தைப் போன்று நிற்பது மரணம்! மரணத்தைக் கடந்தால்தான் மறுமையை அடைய முடியும். எனவே ஒருவன் இறைவனை விரும்பும் போது அவன் தன் மரணத்தையும் விரும்பியே தீர வேண்டும். அதைக் கண்டு தடுமாறி ஓடக் கூடாது. ஏனென்றால் ஒருவன் தன் நண்பனைக் கண்டு இன்பமடைவதற்காக ஊரை விட்டுத் தன் நண்பனின் ஊருக்குச் செல்வது இயல்பு. இந்தப் பிரயாணத்தையும் இதில் உபயோகப்பட்ட வாகனங்களையும் அவன் விரும்பத்தான் செய்வான். காரணம் அவை அவனுடைய நண்பனின் சந்திப் பிற்கு ஒத்தாசை புரிகின்றன!

மரணம் இறை சந்திப்பிற்குத் திறவுகோல். மரணத்தை விரும்பாதவன் இறை சந்திப்பைப் பெற முடியாது!

''ஒருவன் இறைவனின் சந்திப்பை விரும்பும்போது இறைவன் அவன் சந்திப்பை விரும்புகிறான்'' என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

2. இறையன்பு கொண்டவன் தன் நேரத்தில் பெரும் பகுதியை இறை வணக்கத்திலும் இறைச் சிந்தனையிலும் செலவிடுவான். அவன் நாவு எந்நேரமும் இறைத் திருநாமங்

களோடு உறவாடிக் கொண்டேயிருக்கும். அவன் உள்ளம் இறை சிந்தனையின் உறைவிடமாக மாறிவிடும். திருமறையை ஓதுவது, அண்ணலவர்களின் அன்புரை குறித்துச் சிந்திப்பது முதலியவை இறையன்பு பூண்டவர்களின் தலையாய கடமைகள். இவர்கள் அண்ணலவர்களையும் விரும்புவார்கள். இறைவனை நபியவர்கள் விரும்ப, நபியவர்களை இவர்கள் விரும்புவார்கள். இறைவனை ஒருவன் விரும்பத் துவங்கும் போது அவனுடைய படைப்புகளிலேயே மிகவும் உயர்ந்த திருநபி அவர்களையும் விரும்பத்தான் செய்வான். இதன் தத்துவார்த்தத்தை ''சகோரத்துவமும் சமரச உறவும்'' என்ற நூலில் விரிவாக எழுதியிருக்கிறேன்.

''நீங்கள் இறைவனை விரும்புபவர்களாயிருப்பின் என்னைப் பின்பற்றுங்கள்'' என்ற மறைக் கருத்தை நீ இது வரை மறந்திருக்க முடியாது.

''இறைவன் உங்களுக்கு உணவளிக்கும் போதெல்லாம் அவனை விரும்பி வழிபடுங்கள். அந்த இறைவனுக்காக என்னை விரும்புங்கள்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

''இறையன்பு கொண்ட ஒரு மனிதனை நீ விரும்பும்போது நீ இறைவனையே விரும்பியவனாகிறாய்!'' என்று சுப்யான் ஸௌரீ (ரஹ்) கூறியிருக்கிறார்கள்.

3. தனித்திருந்து இறை தியானம் புரிவதில் இறையன்பு கொண்டவன் இன்பமடைவான். திருமறையை அதிகமாக ஓதுவதிலும் தஹஜ்ஜுத் தொழுகையில் ஈடுபடுவதிலும் அவன் பேரின்பம் காண்பான். இரவு பகல் எந்நேரத்தையும் அவன் ஆத்மீக வழியில் செலவிடுவான்.

4. இறைவணக்கத்தை ஒரு புதையல் என்று அவன் எண்ணுவான். அதை எக்காரணம் கொண்டும் நழுவ விட மாட்டான். வெகு நேரம் நின்று வணங்குவதையும் அவன்

சிரமமாகக் கொள்ள மாட்டான், இறைவணக்கத்தில் அவனைப் பொறுத்தவரை சிரமம் என்ற வார்த்தைக்கே இடமில்லை.

5. உண்மையான இறையன்பு கொண்டவன் தன் அன்பை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டான். நான் இறையன்பு கொண்டவன் என்ற வாதத்தை அவனிடமிருந்து எதிர் பார்க்கவே முடியாது.

இவை யாவும் இறையன்பிற்குரிய அடையாளங்கள். இறையன்பு பூண்ட பெரியோர்களெல்லாம் இவ்வாறுதான் நடந்து வந்தார்கள். இன்பமடைந்தார்கள். உன் உள்ளத்தை நீயே ஆராய்ந்து பார். இத்தகைய பண்புகள் உன்னிடம் இருக்கின்றனவா! என்று சிந்தித்துப் பார். அதன் பிறகுதான் உன்னால் எதையும் தீர்மானிக்க முடியும். 'நான் இறையன்பு உள்ளவன்' என்று உளறிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அர்த்தமில்லாத செயலைச் செய்வது அறிவுடைய எந்த மனிதனுக்கும் அழகல்ல!

வல்லவன் கருணை புரிபவன். அவன் நன்மைக்கு அருள்வானாக! ஆமீன்.